Registered as a news paper. இலவசப் பிரதி
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


SCS Soft View Computer Systems
For all your Computer Requirements
Computer Assembling & Sales
Maintenance, Repairing & Networking
Monitors, Printers, Scanners & UPS Repairing
Software Installations
CD Writing & Printing
No.778, Thaddatheru Junction, K.K.S Road, Jaffna, Sri Lanka
☎ 021-2225170

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷஃபான் 23 (30.10.2002) புதன்கிழமை இதழ் : 30



தாய்லாந்து செல்லமுன்னர் நேற்று தலைவர் பிரபாவைச் சந்தித்த கேணல் கருணா, திருமதி அடேல் பாலசிங்கம், அன்ரன் பாலசிங்கம், சு.ப.தமிழ்ச்செல்வன், ஜோய் மகேஸ்வரன், ருத்திரகுமாரன்.





புதுக்குடியிருப்பிலிருந்து புறப்பட்ட ஹெலிகளில் அன்ரன் பாலசிங்கம், சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர்.

## நோர்வே தூதரகத்தில் நேற்றிரவு தங்கியபின்னர்

# புலிகள் குழு அதிகாலை தாய்லாந்து புறப்பட்டது!

### விண்ணாணம் விநாசியர்



விமானத்தில உருவாகிற நெருக்கம் தாய்லாந்திலையும் தொடரட்டும்...

## புறப்படுமுன் பிரபாவுடன் பலமணி நேரம் ஆலோசனை

(புதுக்குடியிருப்பிலிருந்து விதுர்ஷன்)

**விடுதலைப் புலிகளின் தலைவருடன் நடத்திய பலமணிநேர ஆலோசனையின் பின், தாய்லாந்தில் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்கென நேற்று மாலை புதுக்குடியிருப்பிலிருந்து புறப்பட்ட விடுதலைப்புலிகளின் குழுவினர், நேற்றிரவு கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தில் தங்கியபின், இன்று அதிகாலை தாய்லாந்து நோக்கிப் புறப்பட்டனர்.**

தாய்லாந்தில் நடைபெறவுள்ள இரண்டாம் சுற்று சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வதற்காக தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் குழு நேற்றுமாலை 4.55 மணியளவில் வன்னியிலிருந்து இரண்டு ஹெலிகொப்டர்களில் புறப்பட்டுச் சென்றது.

புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கில் இருந்து புறப்பட்டுச் சென்ற விடுதலைப்புலிகளின் குழுவில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், அரசியல்

(10 ஆம் பக்கம் பார்க்க)



ஹெலியில் புறப்படத் தயாராகும் புலிகள் குழுவினரில் சிலர்...

## இருதரப்பும் ஒரே விமானத்தில்!

(கொழும்பு நிருபர்)

தாய்லாந்தில் நடைபெறவுள்ள இரண்டாவது சுற்றுச் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளவுள்ள அரச பிரதிநிதிகளும் புலிகளின் பிரதிநிதிகளும் ஒரே விமானத்தில் தாய்லாந்துக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இன்று அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் செல்லும் விமானத்தில் அரசதரப்புப் பிரதிநிதிகளான அமைச்சர்கள் ஜி.எல்.பீரீஸ், மிலிந்த மொரகொட, ரவூப் ஹக்கீம் ஆகியோரும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பயணம் செய்தனர்.

## ஹோட்டலுக்கு கடும் பாதுகாப்பு!

அரசு-புலிகள் தரப்புகளிடையே தாய்லாந்தில் நாளை நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுக்களை ஒட்டி கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளை தாய்லாந்து அரசு செய்துள்ளது.

பேச்சுக்கள் நடைபெறவுள்ள 193 அறைகள் கொண்ட ரோஸ் கார்டன் ஹோட்டலில், பேச்சுக்களில் பங்குபற்றும் தரப்பினர்களுக்காகவும் செய்தியாளர்களுக்காகவும் அறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இந்த ஹோட்டல் உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு இதற்கு தாய்லாந்து அதிரடிப்படையினரால் பாதுகாப்பளிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலாக தாய்லாந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயத்தை நீக்க முடியாது; நிரந்தர அமைதியின் பின்பே தளர்வுகள்!

### யாழ்.செயலகக் கூட்டத்தில் படையதிகாரிகள் அறிவிப்பு

(நமது நிருபர்)

வெறும் யுத்த நிறுத்தம் மட்டுமே ஏற்பட்டுள்ளது, நிரந்தர சமாதானம் இன்னமும் ஏற்படவில்லை என்று கூறிய படை அதிகாரிகள் - யாழ்.செயலகத்தில் நடைபெற்ற மீளக்குடியமர்வு தொடர்பான மாநாட்டில், மக்கள் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்களுக்கும் கோரிக்கைகளுக்கும் சாதகமாகப் பதில் தர முடியாமல் காணப்பட்டனர்.

தமது பாதுகாப்புக் காரணங்களை விட்டுக்கொடுக்க முடியாது என்றும் - தங்களால் சாத்தியமான அளவு என்ன செய்ய முடியுமோ அதையே செய்ய முடியும் என்றும் அவர்கள் கூறினர்.

இராணுவம் மற்றும் கடற்படையின் உயர்நிலை அதிகாரிகளுக்கும், யாழ்ப்பாண மாவட்டத்தின் நிர்வாக அதிகாரிகள் மற்றும் சிவில் சமூகத்தின் பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோருக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று பேரணி!

**வலி.வடக்கில் மக்களை மீளக் குடியமர்த்த அனுமதிக்கக் கோரி இன்று *'வலி.வடக்கு மீட்புப் போராட்டம்'* பெரும் மக்கள் பேரணியாக மல்லாகம் சந்தியிலிருந்து ஆரம்பித்து தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பணிமனை வரை நடாத்தப்படவுள்ளது.**

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் மாணவர் அரங்கம், விருந்தினர் பக்கம், குறைதீர் மன்றம்.

# அத்துமீறி மீன்பிடித்த 44 தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்!

## 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(நமது நிருபர்)

தமிழகத்தைச் சேர்ந்த 44 மீனவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்தொழில் செய்து கொண்டிருக்கும் போது எழுவை தீவில் வைத்து கடற்படையினரால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்களின் எட்டு ட்ரோலர்களையும் பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர். கைது செய்யப்பட்ட மீனவர்களை நேற்று யாழ்.நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்திய போது இவர்களை எதிர்வரும் 6ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படியும், வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தும்படியும் யாழ்.மேலதிக நீதிபதி சரோஜினிதேவி இளங்கோவன் உத்தரவிட்டுள்ளார்.

இலங்கைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 44 தமிழக மீனவர்களினதும் பெயர்கள் வருமாறு:-

கோவிந்தராஜா வேலாயுதம், வைத்திலிங்கம் இரத்தினவேல், வேலாயுதம் சரவணன், வேலுச்சாமி முருகன், குப்புசாமி நாகமுத்து, இராம பாண்டியன், வேலாயுதம் கமிஸ்டன், குப்புசாமி வெள்ளையப்பன், அடைக்கலம் நாராயணன், பெருமாள் ஏழுமலை, சிகாமணி ரசுகானின், கனகரத்தினம் கமிஸ்டன், சிகாமி காந்தி, செல்வராஜா சந்திரன், கோவிந்தன் ஆண்டப்பன், விஜயபாலன், நடேசன் கணேசன், வாழையம் வேலு, குப்புராஜ் மகேந்திரன், பொன்னுச்சாமியப்பன், குமார் குப்புசாமி, கோடிமாரி பால்ராஜ், மணியன் ஜெபநேசன், இரட்ணசாமி வீரப்பன், கோவிந்தசாமி மணி, வாழையன் விஜி, முத்துச்சாமி ஆறுமுகன், குட்டியாண்டி சங்கர், நடேசன் வடிவேலு, தேவர் பழனியாண்டி, முத்துச்சாமி பழனிச்சாமி, பழனியாண்டி செல்வகணபதி, இரத்தினசாமி வேல்முருகன், பழனியாண்டி முருகானந்தன், நல்லமுத்து ஆறுமுகம், இரத்தினசாமி செல்வமணி, சபாபதி செல்வம், இராஜசிங்கம் வைத்தியலிங்கம், பழனியாண்டி இடும்பன், பழனியான்டி பழனி, மாரியப்பன் செம்பகன், கோவிந்தசாமி கண்ணன், குச்சாப்பிள்ளை செல்லக்குமார், பழனியாண்டி ஆனந்தகுமார்.

ஆகிய மீனவர்களே கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டவர்களாவர்.

(லி)

## இன்றைய நாள் இனிய நாள்

**30.10.2002 - புதன்கிழமை**

**மேடம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, தெய்வபக்தி, சமயநூல் கற்றல், கல்விச் சமநிலை, வியாபாரம் சமநிலை.

**இடபம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, எதிரிகளால் பிரச்சினை, எடுத்தகாரியம் வெற்றி, கல்வி முன்னேற்றம்,வியாபாரம் சமநிலை.

**மிதுனம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, குடும்பசுகம், பெரியோர் ஆசி, உறவினர் நண்பர் வருகை, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**கர்க்கடகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, மனமகிழ்ச்சி, அறுசுவையுண்டி, கல்வி சமநிலை, வியாபாரம் முன்னேற்றம்.

**சிங்கம்** :- தேகசுகக்குறைவு, உறவினருடன் மனஸ்தாபம், எடுத்த காரியம் வெற்றி, கலைநிகழ்ச்சியில் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம்.

**கன்னி** :- தேகசுகம் நன்று, பணவரவு, புத்திக்கூர்மையால் சிறப்பான காரியங்களைச் செய்தல், கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, பெண்கள் தொடர்பினால் மகிழ்ச்சி, விதம்விதமான ஆடை அணிவதில் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**விருச்சிகம்** :- தேகசுகம் நன்று, பணவரவு, பொதுச் சேவையில் கௌரவம், தெய்வ தரிசனம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**தனு** :- தேகசுகம், செய்தொழில் லாபம், புகழ் அதிகமாதல், ஆடம்பரமான பொருட்களில் பிரியம், பெண்கள் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**மகரம்** :- தேகசுகம் சமம், தொழில் முன்னேற்றம் குறைவு, உறவினர்களால் மகிழ்ச்சி, ஆடை அணிவதில் மகிழ்ச்சி, கல்வி சமம், வியாபாரம் சமம்.

**கும்பம்** :- தேகசுகம் நன்று, பணவரவு நன்று, தெய்வ வழிபாடு, உறவினர் மகிழ்ச்சி, கல்வி சமம், வியாபாரம் சமம்.

**மீனம்** :- தேகசுகம் சமம், தேவையற்ற செலவு, புத்திரரால் கவலை, தெய்வ வழிபாடு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

நமது ஈழநாடு
நடாத்தும்
க.பொ.த(சா/த) பரீட்சைக் கருத்தரங்கு - 2002

**2002 க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தயாராகும் மாணவமணிகளே!**

உங்களுக்காக வெகுவிரைவில் பரீட்சைக் கருத்தரங்கு ஒன்றை யாழ். நகரில் நடத்தவுள்ளது. பரீட்சைக்கு ஆயத்தமாகி வரும் உங்களுக்காக அனுபவமிக்க ஆசான்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டு ஆலோசனைகள், மாதிரி வினாத்தாள் பயிற்சி ஆகியவற்றை வழங்கவுள்ளனர்.

இக் கருத்தரங்கில் பங்கு பற்றி பயன் பெற விரும்பும் மாணவர்கள் கீழ்வரும் படிவத்தை பூர்த்தி செய்து அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக

மாணவர் மலர் பரீட்சைக் கருத்தரங்கு,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வரவை உறுதிப்படுத்த இப் பத்திரத்தை அனுப்பி வைப்பது அவசியமாகும். பிரவேசம் இலவசம். தேவையான காகிதாதிகள் வழங்கப்படும்.

பரீட்சைக் கருத்தரங்கு தொடர்பான முழுமையான விபரங்கள் வெகுவிரைவில் நமது ஈழநாடு பத்திரிகையில் வெளிவரும்

நமது ஈழநாடு
க.பொ.த(சா.த) பரீட்சை கருத்தரங்கு -2002
பங்கு பற்றுவதற்கான விண்ணப்பம்

முழுப்பெயர்:------------------------------------
முகவரி:------------------------------------
பாடசாலை:------------------------------------
பங்குபற்ற விரும்பும் பாட அமர்வுகள்:--------------------
(தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், சமூகக்கல்வி வணிகவியல் பாடங்களுக்கான அமர்வுகளே நடைபெறும்)

--------------------
ஒப்பம்

1077

வாடிக்கையாளர்கள், அன்பர்களுக்கு எமது தீபாவளி வாழ்த்துக்கள்
இதோ! மீண்டும் யாழ்.நகரில்
AZAM TAILORS
பெண்களுக்கான, ஆண்களுக்கான நவநாகரிக ஆடைகளைத் தைத்துக்கொள்ள இன்றே நாடுங்கள்
அசாம் ரெயிலர்ஸ்
No.8, யுபில் பசார், பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(சி-099)

SUNDHARSON
Importers & Distributors of Electrical Items, P.V.C.pipes & Fittings Etc.
Central Market View, Manipay.
T.P. / Fax : 021 - 2222751

தீபாவளிப் பரிசுப் போட்டி
சுந்தர்சன்
மத்திய சந்தை முன்பாக
பிரதான வீதி, மானிப்பாய்.
உள்ளூரிலேயே மக்கள் சேவையை சிரமேற் கொண்டு
கடந்த 22 ஆண்டு காலமாக
- மின்சார உபகரணங்கள்
- P.V.C.நீர்க் குழாய்கள், இணைப்புக்கள்
- அலங்காரப் பொருட்களை

நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன் மொத்தமாகவும், சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
சுந்தர்சன் மானிப்பாய்

தீபாவளி - 2002 பரிசுப் போட்டி விபரம்
25.10.2002 - 06.11.2002 வரையிலான காலப்பகுதியில் எமது ஸ்தாபனத்தில் அதி கூடிய தொகைக்கு பொருட்களைக் கொள்வனவு செய்யும
- வீட்டு உரிமையாளர்கள் மூவருக்கும்
- வர்த்தகப் பிரமுகர்கள் மூவருக்கும்
- கட்டட ஒப்பந்தக்காரர்கள் மூவருக்கும்
- மின் இணைப்பாளர்கள் அறுவருக்கும்

அதிசயிக்கத்தக்க பெறுமதிவாய்ந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.
ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்
மத்திய சந்தை முன்பாக பிரதான வீதி, மானிப்பாய்.
சுந்தர்சன் உரிமையாளர்
T.P./ Fax - 2222751

பாராட்டி வாழ்த்துகின்றோம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 22 ஆவது பட்டமளிப்பு விழாவின்போது, எமது சங்கப் பரப்புக்குட்பட்ட
திருவாளர் அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை
(பட்டயக் கணக்காளர்)
அவர்கள் கௌரவ கலாநிதிப் பட்டம் பெற்றமையினையும்,
பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம்
(கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்)
அவர்கள் அதிஉயர் பட்டமாகிய விஞ்ஞான கலாநிதிப் பட்டம் பெற்றமையினையும் கௌரவித்துப் பாராட்டுவதுடன் அவர்கள் சேவையில் மேன்மேலும் மேன்மையுற இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.
தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
கட்டைவேலி நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம், கரவெட்டி.
(சி-097)

சிறி நதியா நகை மாளிகை
22 கரட் தங்க நகைகள் - நவீன, அழகிய டிசைன்களில் உறுதியுடனும், உத்தரவாதத்துடனும் வடிவமைத்துத் தர உகந்த ஸ்தாபனம்
நங்கையர் விரும்பும் நவ நாகரிக நகை வடிவங்களை நம்பிக்கையுடன் செய்து நலம்பெற நாடுங்கள்
சிறி நதியா நகை மாடம்
இல.1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (வின்சர் தியேட்டர் அருகில்)
கிளை - 56, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. - 021-2222709

வாருங்கள்! வந்து அருந்தி மகிழுங்கள்!!
யாழ்ப்பாணத்தில் பலவகைப்பட்ட குளிர்பானங்கள், உயர்சுவை கொண்ட சிற்றுண்டி வகைகளுக்கு அன்றுமுதல் இன்றுவரை நாடவேண்டிய ஒரே இடம்.
லிங்கன் கிறீம் ஹவுஸ்
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# திருமலையில் தொடர்ந்தும் சிங்களக் குடியேற்றமா? 'பன்குளம'வாக மாறிய பன்குளம் கிராமம்!

(வவுனியா நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் பாரம்பரிய தமிழ்க் கிராமமான பன்குளம், சிங்களப் பெயரில் 'பன்குளம' என்று மாற்றப்பட்டிருக்கின்றது.

இதுவரை காலமும் பன்குளம் விமானப் படைமுகாம் மற்றும், பன்குளம் கிராமிய வைத்திய சாலை என்றே பெயர்ப்பலகைகள் போடப்பட்டிருந்தன.

கடந்தவாரம் இப்பெயர்ப்பலகைகளில் மாற்றம் செய்யப்பட்டு "பன்குளம" என்று சிங்களப் பெயர் எழுதப்பட்டுள்ளது.

பன்குளம் கிராமம் முற்றாகத் தமிழ்மக்கள் வாழ்ந்த பகுதியாக இருந்ததுடன் 1985ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சிங்களக் குடியேற்றக்காரர்களாலும், படையினராலும் இப்பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டிருந்தனர்.

புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னர் மீளக்குடியமர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுவரும் நிலையில் பன்குளம் கிராமம் 'பன்குளம' எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## மண்டைதீவில் சிரமதானம்

(புலோலி)

மண்டைதீவு கிழக்கு பகுதியில் விவசாயம் செய்ய படையினர் அனுமதித்ததை தொடர்ந்து நேற்றுமுன் தினம் மண்டைதீவு முதலாம் வட்டாரப் பகுதியில் அமைந்துள்ள முத்துமாரி அம்மன் ஆலயப்பகுதியும் அதன் சுற்றாடலும் அப்பகுதி மக்களால் சிரமதானப் பணிமூலம் துப்பரவு செய்யப்பட்டது. (15)

# 'இசட்'புள்ளி முறையால் பாதிக்கப்பட்ட 16 மாணவர்கள் நீதிமன்றில் வழக்கு!

(நமது நிருபர்)

பல்கலைக்கழக அனுமதிக்கான 'இசட்' புள்ளி முறைக்கு எதிராக 16 மாணவர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வழக்கில் பல்கலைக் கழக மானியக்குழு, மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் உட்பட 42 பேர் பிரதி வாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர்களில் 4 பேர் மூன்று பாட்ங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றுள்ளதோடு ஏனைய 13 பேரும் இரு அதி விசேட சித்திகளும் ஒரு விசேட (பி) சித்தியும் பெற்றுள்ளனர்.

இவர்கள் மருத்துவ பீடத்தில் பயில வாய்ப்பு இருந்து 'இசட்' முறையினால் பற்சிகிச்சைப் பிரிவுக்கே தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும், குறைந்த புள்ளிகளுடைய 47 பேர் மருத்துவ பீடத்துக்குத் தெரிவாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

தங்களது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும், தம்மை மருத்துவ பீடத்துக்குச் சேர்க்குமாறு அவர்கள் நீதிமன்றத்துக்கு சமர்ப்பித்த மனுவில் கோரியுள்ளனர்.

# அரசாங்கத்தைக் கைவிட மாட்டோம்; பகிஷ்கரிக்கும் மு.கா.எம்.பீக்கள் தெரிவிப்பு!

(நமது நிருபர்)

அரசாங்கத்தையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் கைவிட்டு, பொதுஜன ஐக்கிய முன்னணியுடனோ அல்லது ஜனாதிபதியுடனோ இணையும் நோக்கமில்லை என்று பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்துவரும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த எம்.பிக்களை கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் ஏ.ஆர்.எம். காதர் சந்தித்தபோதே மேற்கண்ட உறுதிமொழி வழங்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இச்சந்திப்பின் பின்னர், பாராளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் 9 முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களும் விரைவில் பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பர் என்று அமைச்சர் ஏ.ஆர். எம்.காதர் நம்பிக்கை தெரிவித்தார்.




கரவெட்டி பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட சர்வதேச சிறுவர், முதியோர்தின நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை, கோட்டக் கல்வி அதிகாரி க.அம்பலவாணர், நிர்வாக அலுவலர் இ.சிவபுண்ணியம் ஆகியோரையும், பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமை உரைநிகழ்த்துவதையும் படத்தில் காணலாம். (23)

# கடற்படைக்கான பயிற்சி முகாம்கள் தீவகத்திலும் மாதகலிலும் அமைப்பு

(கொழும்பு)

முப்படைகளும் ஆட்பலத்தை உயர்த்திக் கொள்வதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. கடந்த 16ஆம் திகதி முதல் சிறிலங்கா இராணுவம் 5 ஆயிரம் புதிய படையினரைச் சேர்ப்பதற்கான நடவடிக்கையில் இறங்கியிருந்தது.

இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதிவரை நாடெங்கும் உள்ள முகாம்களில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. எனினும் கடந்த இரண்டு வாரங்களில் நானூற்றைம்பதுக்கும் குறைவானோரே இராணுவத்தில் சேர முன்வந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை - கடற்படையும் வான் படையும் தமது ஆளணிப் பலத்தை உயர்த்திக்கொள்ளும் நோக்கில் ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளனர். கடற்படையில் 2 ஆயிரம் புதிய படையினரைச் சேர்க்கவும், வான்படையில் 500 பேரை இணைத்துக் கொள்வதற்கும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன.

புதிதாக இணைந்து கொள்ளும் படையினருக்கான பயிற்சிகளை வடபகுதியிலுள்ள முகாம்களில் வைத்து வழங்குவதற்கும் இராணுவ மற்றும் கடற்படைத் தலைமையகங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

தீவகத்திலும், மாதகலிலும் கடற்படையினருக்கான பயிற்சி முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இராணுவத்தினருக்கான பயிற்சி நிலையங்கள் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (க)

### நிர்வாகக் குறைபாடு - கவனக்குறைவு - தாமதங்கள்

# திணைக்களங்களை மீளமைக்க அரசாங்கம் புதிய நடவடிக்கை

(கொழும்பு நிருபர்)

அரசாங்கத் திணைக்களங்களை மீளமைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை பொதுநிர்வாக அமைச்சு மேற்கொண்டு வருவதாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்திருக்கின்றார்.

உலக வங்கியின் உதவியுடன் அரசாங்கத் திணைக்களங்களில் நிர்வாக நடவடிக்கைகளை மீளமைப்புச் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. இந்த மீளமைப்புத் திட்டம் நடைமுறைக்கு வந்தால் தற்போது அரச திணைக்களங்களில் நிலவுகின்ற நிர்வாகக் குறைபாடுகள், வசதிக்குறைவுகள், காலதாமதங்கள் போன்ற விடயங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் எனப் பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

மேலும், இத்திட்டத்துக்கு உலக வங்கியிடம் இருந்து ஆறு மில்லியன் அமெ. டொலர், நிதியுதவியாகக் கிடைக்கவுள்ளது. இதன்மூலம் மூன்று மட்டங்களில்-உள்ளூராட்சி, மாகாண சபைகள், மத்திய திணைக்களங்களில் மீளமைப்புத் திட்டங்கள் நடைமுறைக்கு வரவுள்ளன.

இத்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தினால் அரச திணைக்களங்களில் பணியாற்றுவோரின் தொகையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், சேவை நீடிப்பு வழங்குதல் முற்றாகத் தடுக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

## காஞ்சிரங்குடாவுக்கு மேலதிக விசாரணைக்குழு உள்துறை அமைச்சர் அனுப்பி வைப்பு!

(கொழும்பு)

காஞ்சிரங்குடாப் படுகொலைகள் சம்பந்தமாக மேலதிக விசாரணைக் குழு ஒன்று கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணைகள் மேற்கொள்ள வேண்டுமென்று தமிழ்க் கூட்டமைப்பினர் வேண்டுகோள் விடுத்ததை அடுத்தே, இவ்விசாரணைக்குழு அங்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக அதிரடிப் படையினர் குற்றவாளிகளாகக் காணப்பட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க மேலும் தெரிவித்துள்ளார்.

## கூட்டுறவுச் சங்க கலந்துரையாடல்

வன்னியில் இருந்து மீள வந்து இணைக்கப்பட்ட ப.நோ. கூட்டுறவுச் சங்கங்களுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாணம், அளவெட்டி-மல்லாகம், காரைநகர், தெல்லிப்பளை, வேலணை, ஊர்காவற்துறை, புங்குடுதீவு-நயினாதீவு ஆகிய இணைக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர்களையும் இரண்டு உயர்மட்டப் பணியாளர்களையும் கலந்துகொள்ளுமாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

# க.பொ.த.(உ/த) மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்குகள்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவிருக்கும் க.பொ.த (உ/த)ப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டற் கருத்தரங்குகள், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டின்கீழ் நடாத்தப்படவுள்ளன.

இக்கருத்தரங்குகளில் பங்குபற்றவிரும்பும் மாணவர்கள் அதற்கான படிவத்தை பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக் காரியாலயத்தில் பெற்று எதிர்வரும் நவம்பர் 20ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்து வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். இக் கருத்தரங்குகள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும் மற்றும் துறைசார் முன்னனி ஆசிரியர்களாலும் நடாத்தப்படுவதால் அனைவரும் தவறாது இக் கருத்தரங்குகளில் பங்குபற்றி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# தாவடி இ.த.க. பாடசாலைக்கு ஜி.ரி.இசட் 16 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(இணுவில்)

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் - கல்லூரிக்கென காணி ஒன்றைக் கொள்வனவு செய்து, அதில் மூன்று மாடிக்கட்டடம் அமைக்கும் வேலையை ஆரம்பித்துள்ளது.

இக்கட்டட வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு ஜி.ரி.இசட் நிறுவனத்தால் 16 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் தளபாடம் கொள்வனவு செய்வதற்கு 2 இலட்சத்து 95 ஆயிரம் ரூபாவையும், மலசல கூடம் அமைப்பதற்கு 4 லட்சத்து நாற்பத்தையாயிரம் ரூபாவையும் வழங்க முன்வந்துள்ளது. இவ்விரண்டு அபிவிருத்திக்காக பெற்றோரின் பங்களிப்பாக 3 இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. (88)

## நாய் குறுக்கே பாய்ந்ததால் மோட்டார் சைக்கிளில் சென்றவர் காயம்

(அரியாலை)

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை நாய் ஒன்று குறுக்கே சென்றதால் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவர் அதைத் திருப்பிய போது, மின்கம்பத்துடன் மோதியதில் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலிப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் நாவாந்துறையில் வசித்து வரும் செல்வராஜா மோகன் (வயது 27) என்பவரே தலையில் படுகாயமடைந்தவராவர். (55)

# வேலையற்றோருக்கு பயிற்சி வழங்க புதிய நிலையம் ஆரம்பிக்கப்படும்

(கொழும்பு)

தேசிய வேலை வழங்கும் திட்டத்தின் கீழ் 'ரக்கியா பியச' என்ற நிலையம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று பிரதித் தொழில் ஆணையாளர் பந்துலசேன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையம் முதலில் மேற்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்படும். மேலும் எட்டு இடங்களில் இந்த நிலையத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையத்தினூடாக வேலைகள் வழங்குவதற்கும், அதற்கான பயிற்சிகள் வழங்கப்படவும் ஏற்பாடு செய்யப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

ஈராக்குக்கு ஆயுதவிற்பனை

# பொஸ்னிய சேர்பிய ஆள்புலப் பகுதியில் பாதுகாப்பு அமைச்சர் பதவி இழந்தார்!

(பொஸ்னியா)

பொஸ்னியாவின் சேர்பிய ஆள்புலத்தில், ஈராக்குக்கு சட்டத்துக்கு முரணான முறையில் ஆயுதங்கள் விற்றார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட இரண்டு சிரேஷ்ட பாதுகாப்பு பிரமுகர்கள் தமது பதவிகளை இழந்தனர்.

ஒருவர் அப்பிரதேசத்தின் பாதுகாப்பு அமைச்சர், மற்றவர் இராணுவ சிரேஷ்ட அதிகாரி.

ஈராக் மீதான ஐ.நாவின் பொருளாதாரத்தடை அமுலாக்கத்தையும் மீறி அப்பிரதேச அரசுக்குச் சொந்தமான ஆயுதக் கம்பனி, இவ்விற்பனையை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈராக்குக்கு ஆயுத விற்பனை செய்தமை தொடர்பாக பூரண விசாரணைகள் மேற்கொள்ளப் படவேண்டும் என பொஸ்னிய அரசாங்கத்தை அமெரிக்கா வலியுறுத்துகிறது.

## ரஷ்யர் விசனம்

(மொஸ்கோ)

பயன் படுத்திய நச்சுவாயு எதுவென்று வெளியிட ரஷ்ய பாதுகாப்புத்துறை மறுத்துவருவது, ரஷ்யாவில் மருத்துவர்கள் மற்றும் சாதாரண மக்களிடம் கடும் விசனத்தை தோற்றுவித்துள்ளது.

வாயுவை இனங்காட்ட மறுத்து வருவதால் மருத்துவர்கள் பாதிக்கப்பட்ட பணயக் கைதிகளுக்கு சரியான சிகிச்சையை வழங்க முடியாமல் உள்ளனர்.



கொல்லப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் மொஸ்கோ நகர பிதா



ஆவேசப்படும் ரஷ்யர்கள்

# ஹொலிவூட் கனவுக்கன்னி வினோனா றைடர் அழகுசாதனப் பொருட்களைத் திருடினாராம்

(வொஷிங்ரன்)

அழகுசாதனப் பொருட்கள், அலங்கரிப்புப் பொருட்கள் விற்பனையாகும் விசேட களஞ்சியத் தொகுதி ஒன்றிலிருந்து இருபது வகையான பொருட்களை திருடினார் என்று குற்றம் சாட்டப்பட்டார் - பிரபலமான அமெரிக்க நடிகை வினோனா றைடர்.



இக்குற்றச்சாட்டை அடிப்படையாக வைத்து அமெரிக்க நீதிமன்றமொன்றினால் நடிகைக்கு எதிராக வழக்கு நடைபெறுகிறது.

வர்த்தக நிலைய நிர்வாகியினால் நடிகை பொருட்களுடன் பிடிபட்டபோது அவ்வாறு பொருட்களை நேர்மையீனமாகக் கவர்ந்து செல்வது போன்ற காட்சியொன்றை தனது இயக்குனரின் வேண்டுகோளுக்கு இணங்க, தான் தயார் செய்து கொள்ள வேண்டிய நிலை இருந்தது என றைடர் தெரிவித்திருந்தார்.

நடிகைக்காக நீதிமன்றில் வாதாடும் ஆன் றன்டில் என்ற சட்டத்தரணி இது ஒரு சிறு களவு விவகாரமே என்று தெரிவித்தார்.

நடிகை வினோனா றைடரின் புகழை உலகறியச் செய்த ஹொலிவூட் திரைப்படங்கள் மூன்று வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக அமெரிக்கர்களின் கனவுக்கன்னிகையான றைடர் மீது களவு(**theft**), வர்த்தக ரீதியான திருட்டு (**commercial burglary**), அநாகரிகச் செயல்(**vandalism**) ஆகிய மூன்று வகையான குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றை நடிகை மறுதலித்துள்ளார்.

எனினும் குற்றச்சாட்டுக்கள் நிருபிக்கப்பட்டால் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனையை அவர் அனுபவிக்க நேரிடலாம் எனத் தெரியவருகின்றது.

## வாயு கண்டுபிடிக்கப்பட்டதாம்

(மொஸ்கோ)

ரஷ்ய இராணுவம் பயன் படுத்திய வாயுவை தாங்கள் இனங்கணடு விட்டதாக மொஸ்கோவிலுள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்தது.

உலகவலம்

## அமெரிக்கர்களுக்கு தூதரகம் எச்சரிக்கை!

(அம்மான்)


ஜோர்தான் தலைநகர் அம்மானில் யு.எஸ்.எயிட் (**USAID**) அமைப்பைச் சேர்ந்த லோறன்ஸ் போலி என்பவர் கொல்லப்பட்டதையடுத்து, ஜோர்தானிலுள்ள அமெரிக்கர்களுக்கு அமெரிக்க தூதரகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. அமெரிக்கர்கள் தமது போக்குவரத்துப் பாதைகள் நேரங்கள் என்பவற்றை ரகசியமாகப் பேணும்படி தூதரகம் கேட்டுள்ளது.

# ஐரோப்பிய ஐக்கிய அரசுகளின் ஒன்றியம் உதயமாகின்ற நாள் நெருங்குகிறதா?

- ஓர் வெளிவிவகாரச் செய்தி ஆய்வு -

ஆள்புல எல்லைகள், வேறுபாடுகளைக் கடந்த ஒன்றிணைந்த ஐரோப்பிய தேசியத்தைக் கட்டியெழுப்பவேண்டும் என்ற விடயத்தை யாப்பு அமைப்பு ரீதியாகக் கொண்டு வருவதில் பிரான்ஸ் அரசு அயராது பாடுபடத் தொடங்கியுள்ளது என்று அறிவிக்கப்படுகிறது.

அரசியல், பொருளாதார, இராணுவ கொள்கை வகுப்பில் ஐரோப்பா முழுவதும் ஒரே குடையின் கீழ் கொண்டுவரப்படுதலே இதன் சிறப்பான அம்சமாகும்.



பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதி ஹிஸ்காட்

ஒன்றிணைந்த ஐரோப்பாவுக்காக கனவுகாணும் கனவான்

பிரான்ஸ் ஜனாதிபதி ஜாக்ஸ் சிராக்கின் உறுதியான ஆசியுடனும் ஒத்துழைப்புடனும் பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதியான 76 வயதுடைய கிஸ்காட் ட்எஸ்ரெங் (**Giscard d` Estaing**) இதற்கான யாப்பு வடிவத்தை வரைவதற்கான பேராளர்கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்கி வழிநடத்துகிறார்.

ஐரோப்பாவின் அதிசிறந்த சட்ட, பொருளாதார, அரசியல் மேதைகள் நூற்றிஐந்துபேர் பங்குபற்றும் இந்த மாநாட்டில், அனைவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் எளிமையான மொழிநடையில் யாப்பு ஒன்றை அமைக்கும் முயற்சிகள் நிறைவேறி வருகின்றன.

ஒன்றிணைந்த ஐரோப்பிய தேசியத்துக்குரிய யாப்பை அமைக்கும் இப்பேராளர் மாநாடு - பிறசில்ஸ் நகரில் நடைபெறுகிறது. அடுத்த ஆண்டுவரை நடைபெறும் இம் மாநாட்டில் அனைத்து ஐரோப்பிய நாடுகளினதும் பல்துறைசார் அம்சங்கள் ஆவணரீதியாகவும் நடைமுறைரீதியாகவும் ஆழமாகவும் அகலமாகவும் அலசி ஆராயப்படுவதாகத் தெரியவருகிறது.

இப்பேராளர் மாநாட்டில் பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதி, ஒரு நகல் வரைபை யாப்பு அமைப்பதற்காக சமர்ப்பித்துள்ளார்.

ஒவ்வொரு ஐரோப்பிய .நாடும் தனது சொந்த அடையாளங்களைப் பேணுவதுடன் ஐரோப்பா என்ற மட்டத்தில் மிகவும் உறவுபூர்வமாக, நெருங்கி ஒத்துழைத்து, கொள்கைகளை உருவாக்குவதுடன் மற்றும் பொதுவான வலுவுள்ள விடயங்களைக் கையாளுவதில் ஒரு சமஷ்டி அரசியல் பாங்குடன் (**Federal basis**) இயங்குவதாக அமைய வேண்டும் என அந்த நகல் வரைபு கூறுகிறது.

மேலும் ஐரோப்பிய ஒன்றியம் எனப்படுவது - ஐரோப்பிய ஐக்கிய அரசுகளின் ஒன்றியம் (**Union of European States**) என்று அழைக்கப்படும் எனவும் அந்த நகல் வரைவில், பிரான்ஸிய முன்னாள் ஜனாதிபதி கூறுகிறார்.

அவரது நகல் வரைபின் பிரதான அம்சங்கள் வருமாறு:-

**பெயர்:-**

ஒன்றிணைந்த ஐரோப்பாவின் பெறுமான விழுமியங்கள் மற்றும் நோக்கங்கள் வரையறுக்கப்படுவதாக முதலாவது பகுதி உள்ளது. பெயர் தொடர்பில் பின்வரும் சிபாரிசுகள் உள்ளன. ஐரோப்பிய சமூகம் (**The European Community**), ஐரோப்பிய ஒன்றியம் (**The European Union**), ஐரோப்பிய ஐக்கிய அரசுகளின் ஒன்றியம் அல்லது ஐக்கிய ஐரோப்பா (**United Europe**) ஆகிய பெயர்கள் பரிசீலிக்கப்படலாம்.

**இரட்டைப் பிரஜாவுரிமை:-**

ஒவ்வொரு ஐரோப்பிய பிரஜையும் தனது அரசினதும், ஒன்றிணைந்த ஐரோப்பிய சமஷ்டி அரசாங்கத்தினதும் பிரஜாவுரிமையைக் கொண்டிருக்க சந்தர்ப்பம் உள்ளது. அதாவது இரட்டைப் பிரஜாவுரிமை (**Dual Cithzenship**) வழங்கப்படும்.

**யார் என்ன செய்வது:-**

ஒன்றிணைந்த ஐரோப்பாவின் பிரதான கட்டமைப்புக்களான ஐரோப்பிய ஆணைக்குழு (**European Commission**), ஐரோப்பிய பாராளுமன்றம் (**The European Parliament**) அங்கத்துவ அரசுகளின் ஐரோப்பிய சபை (**The European Council of Member States**) ஆகியவற்றின் அதிகாரங்களை யாப்பின் நகல் வரைவு கூறுகிறது.

**வெளிப்படைத் தன்மையும், அங்கத்துவ அரசுகள் வெளியேறலும்:-**

ஒன்றிணைந்த ஐரோப்பாவின் வலுவேறாக்கத்துடன் சம்பந்தமான அத்தனை நிறுவனங்களும் - சாத்தியமான அளவுக்கு வெளிப்படையானதாகவும், அங்கத்துவ அரசுகளின் ஐரோப்பிய சபையில் நடைபெறும் அத்தனை விவாதங்களும் பொதுமக்கள் தரிசிக்கும் வகையிலும் அமைய வேண்டும் எனவும் வரைபு கூறுகிறது.

அத்துடன் ஒன்றிணைந்த ஐரோப்பிய சபையிலிருந்து ஒரு நாடு விலகிக் கொள்வதற்கான ஒழுங்கு முறைகளையும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையும்கூட வரைபு தெரிவிக்கிறது.

பிரான்ஸின் முன்னூக்கத்துடன் நடைபெறும் 'அகண்ட ஐரோப்பாவுக்கான' இம் முயற்சி பற்றி அரசியல், பொருளாதார, இராணுவ நலன்களின் அடிப்படையில் ஐக்கிய அமெரிக்கா (**United States of America**) சந்தோசம் கொள்ளப்போவதில்லை என்பது வெள்ளிடைமலை. ஆனால் ஒன்றிணைந்த ஐரோப்பாவின் 'இடக்கரடக்கல்' இல்லாத வெளிப்படையான வெற்றிக்கு அமெரிக்காவின் உற்ற நண்பனான பிரிட்டனின் பூரண ஒத்துழைப்புத் தேவை. ஆனால் ஐரோப்பாவின் ஏனைய பிரதான கூட்டாளிகள் ஒற்றுமைப்படுவார்களானால் பிரிட்டனும் 'நானும் கூட நானும் கூட' என்று ஒத்துழைப்புக் கோஷம் எழுப்பும் என எதிர்பார்க்கலாம்.

**புவியரங்கள்**

தற்போதைக்கு பிரிட்டன் ஓரிரு அதிருப்திகளை மட்டும் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறது. அதாவது இரட்டைப் பிரஜாவுரிமை முறைமையை ஐரோப்பாவின் எல்லா நாட்டுப் பிரஜைகளும் கொண்டிருத்தல் எவ்வளவு தூரம் பொருந்தும் என்றும் பிரிட்டன் கேட்கிறது. ஏனெனில் ஐரோப்பாவுக்குள்ளேயே வளப்பகிர்வு, சேவைப்பகிர்வு என்பவற்றில் பொருளாதார ரீதியான ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. அரசியல் ரீதியான விவகாரங்களிலும் ஏற்றத்தாழ்வுகள் பெருமளவில் தெரிகின்றன. இந்நிலையில் அரசியல் பொருளாதார நலன்களுக்காக ஐரோப்பாவுக்குள் ஏழை ஐரோப்பியர்கள் செல்வந்த மையங்களில் தஞ்சமடைவோராக மாறலாம எனப் பிரிட்டிஷ் அரசு கருதுகிறது. இதனால் இரட்டைப் பிரஜாவுரிமை முறையை பிரிட்டன் எதிர்க்கிறது.

எனினும் வெற்றியுடன் வீறுநடை போட முற்படும் மாநாட்டின் பேராளர்கள், ஐரோப்பாவை ஒன்றிணைக்கும் பல சிந்தனைகளை இன்னமும் உற்சாகமாகவே முன்வைக்கின்றனர்.

ஒன்றிணைந்த ஐரோப்பாவுக்கான திடமான அதிகாரங்கள் நிறைந்த வெளிவிவகார செயலாளர் ஒருவர் வெளிவிவகாரம் மற்றும் அதனுடன் தொடர்பான பாதுகாப்பு விவகாரங்களைக் கையாள நியமிக்கப்படுவார் எனவும் சிபாரிசுகளில் கூறப்படுகிறது.

மேலும் ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் அங்கத்தவர்களுடன் அதில் அங்கத்துவம் வகிக்கும் அரசுகளின் பாராளுமன்ற அங்கத்தவர்களும் ஒன்றாக மகிழ்ந்து கூடி விவாதித்து வரலாறு படைப்பது என்றும் - பிரான்ஸின் முன்னாள் ஜனாதிபதி தனது வரைபுக்கு ஊடாகச் சிபாரிசு செய்கிறார்.

யாப்பு ஒன்றை அமைக்கும் இப்பேராளர்களுள் ஐரோப்பிய அரசுகளின் சார்பில் கலந்துகொள்ளும் இராணுவ, பொருளாதார அரசியல் நிபுணர்கள், அரசுகளின் பாராளுமன்றப் பிரதிநிதிகள், ஐரோப்பிய பாராளுமன்றம் , ஐரோப்பிய ஆணைக்குழு பிரதிநிதிகள் அடங்குவர்.

பிரான்ஸ் முன்னாள் ஜனாதிபதி கிஸ்காட் தனது பாரிய முயற்சியை, அமெரிக்க ஐக்கிய நாட்டை உருவாக்க உழைத்த முன்னோடிகளின் பணியுடன் ஒப்பிட்டுப் புளகாங்கிதப் படுகின்றார்.

ஐரோப்பிய ஒன்றியத்தை 2004ஆம் ஆண்டில் விரிவாக்கம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதனால், அதற்கு முன்பாக 2003 ஆம் ஆண்டளவில் ஒன்றிணைந்த, அகண்ட ஐரோப்பாவுக்கான யாப்பு அங்கீகரிக்கப்படுமா என்பது மிகப்பெறுமதியான வினாவாக எழுந்து நிற்கிறது.

# வணிகக்கல்வியும் கணக்கீடும்

## கல்விப் பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர)ப் பரீட்சை - 2002
(மாதிரி வினாத்தாள்)



# மாணவர் மலர்

கடந்த வாரத் தொடர்ச்சி...

24. தொலைபேசிக் கட்டணம் ரூ. 800 பேரேட்டில் ரூ. 80 எனப் பதிந்ததைத் திருத்தும்போது
 1. காசுக் கணக்கு வரவு 720 ரூபா, தொலைபேசி கணக்கு செலவு ரூ. 720
 2. தொங்கற்கணக்கு வரவு 880 ரூபா, தொலைபேசி கணக்கு செலவு ரூ. 880
 3. தொலைபேசி கணக்கு வரவு 720 ரூபா, தொங்கல் கணக்கு செலவு ரூ. 720
 4. தொலைபேசி கணக்கு வரவு 720 ரூபா, காசுக்கணக்கு செலவு ரூ. 720

25. பின்வருவன சில்லறைக் காசேடு தொடர்பாகத் தரப்பட்டுள்ள சில கூற்றுக்களாகும். அவற்றுள் மெய்யான கூற்று எது?
 1. பகுப்பாய்வு நிரல்களின் மொத்தத் தொகைகள் காசேட்டிற்கு வரவு வைக்கப்படும்
 2. செலவுசார் நிரல்களின் மொத்தத் தொகைகள் காசேட்டிற்கு செலவு வைக்கப்படும்
 3. பகுப்பாய்வு நிரல்களின் மொத்தத் தொகைகள் பேரேட்டில் பொருத்தமான கணக்குகளுக்கு வரவு வைக்கப்படும்.
 4. சில்லறைக் காசாளர் கொடுப்பனவுகளைத் தனது சொந்தத் துணிபின் பேரில்செய்யமுடியும்.

26. பொதுப்பேரேட்டில் அடங்கி இருப்பவை
 1. ஆட்குறிக்கும் கணக்குகள் மாத்திரம்
 2. செலவின, வருமானக் கணக்குகள்
 3. சொத்துக்கள், பொறுப்புக்கள் சார் கணக்குகள்.
 4. ஆட்குறிக்கும் கணக்குகள் தவிர்ந்தவை .

27. வங்கிக்கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிப்பதற்கு அவசியமானவற்றைத் கொண்டுள்ள விடையைத் தெரிவு செய்க
 1. காசேட்டின் காசு நிரல்களும் வங்கிநிரல்களும்
 2. காசேட்டின் வங்கி நிரல்களும் வங்கிக்கூற்றும்
 3. காசேட்டின் வங்கி, காசு, கழிவீட்டுநிரல்கள்
 4. காசேட்டின் காசு நிரலும், வங்கிக்கூற்றும்

28. கொள்வனவு நாளேட்டின் (தினசேரியின்) மொத்தத்தொகையைப் பேரேட்டுக்கு மாற்றுவதற்கான இரட்டைப்பதிவு எது?
 1. கொள்வனவுக்கணக்கு வரவு கடன்பட்டோர் கணக்கு செலவு
 2. கொள்வனவுக்கணக்கு வரவு கடன்கொடுத்தோர் கணக்கு செலவு
 3. கடன்பட்டோர் கணக்கு வரவு, விற்பனைக்கணக்கு செலவு
 4. கடன் கொடுத்தோர் கணக்கு வரவு, கொள்வனவுக் கணக்குசெலவு.

29. ஒரு வணிகம் தயாரிக்கும் இலாபநட்டக் கணக்கிற்குப் பதிலாக, இலாப மீட்டாத ஒரு வணிக முயற்சியினால் தயாரிக்கப்படுவது எது?
 1. பெறுவனவுகள், கொடுப்பனவுகள் கணக்கு
 2. வருமானச் செலவீட்டுக்கணக்கு
 3. ஒப்பப் பணக்கணக்கு
 4. சிற்றுண்டிச்சாலை விற்பனைகள் கணக்கு

30. சரியான கணக்கீட்டுச் சமன்பாடானது
 1. மூலதனம் + சொத்துக்கள் + செலவீடுகள் = பொறுப்புக்கள் + வருமானம்
 2. மூலதனம் + வருமானம் + பொறுப்புக்கள் = சொத்துக்கள் + செலவீடுகள்
 3. மூலதனம் + செலவீடுகள் + பொறுப்புக்கள் = சொத்துக்கள் + வருமானம்
 4. மூலதனம் + செலவீடுகள் + வருமானம் = பொறுப்புக்கள் + சொத்துகள்

31. முகாமையாளர்கள் முறைமையான கணக்கீட்டுப்பதிவேடுகளில் அக்கறை காட்டுகின்றனர், ஏனெனில்
 1. முகாமையாளர்கள் கணக்கீடு பற்றி அறிந்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதனால்
 2. அது கம்பனிப்பதிவாளரினால் விதிக்கப்பட்ட ஒரு தேவையாய் இருத்தலினால்
 3. அவர்கள் இதற்கு ஊதியம் பெறுவதனால்
 4. நல்ல முகாமைக்கு அவசியமான தரவு கணக்கீட்டுப் பதிவேடுகளில் இருந்து பெறப்படுவதனால்

32. ரூ. 5000 ரொக்கப் பணத்துடன் பரதன் ஒரு வியாபாரத்தைத் தொடங்கினான். அவன் வங்கியிலிருந்து ரூ. 3000 கடன்பெற்று ரூ. 2000 பெறுமதியுள்ள பண்டங்களைக் கைக்காசுக்கு வாங்கினான். இவ்வியாபாரத்தின் சொத்துக்களின் மொத்தப் பெறுமானம் யாது?
 1. ரூ. 10,000  2. ரூ. 8,000  3. ரூ. 7,000  4. ரூ. 6,000

33. சொத்துக்களுக்குத் தேய்மானமிடுவதில் பயன்படுத்தப்படும் 'நேர்கோட்டு முறையிற்' காணப்படத்தக்க சிறப்பான அம்சம் யாது?
 1. ஒவ்வோர் ஆண்டும் தேய்மான வீதம் வேறுபடும்
 2. ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் தேய்மானமாகச் சமமான ஒரு தொகை இலாப நட்டக் கணக்கிற்குத் தாக்கல் செய்யப்படுகிறது
 3. ஒவ்வோர் ஆண்டும் தேய்மானமாகக் குறித்த ஒரு சதவீதம் மீதியிலிருந்து கழிக்கப்படுகிறது.
 4. இந்த முறை பொறித் தொகுதிக்குத் தேய்மானமிடுவதற்கு மட்டும் பயன் படுத்தப்படலாம்.

34. வருமான, செலவினக் கணக்கில சேர்க்கப்பட வேண்டிய விடயத்தைத் தெரிவு செய்க.
 1. உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் கிரயமும், விற்பனைகளும்
 2. புத்துருவாகும் வேலையும், மூலப்பொருள்களும்
 3. கிடைத்த உறுப்புரிமைக் கட்டணங்களும், கிடைக்கவேண்டிய உறுப்புரிமைக் கட்டணங்களும்
 4. விற்பனைகளும், ஆரம்பத்தொக்கும்

35. வியாபாரத்தேவைகளுக்காக ஒரு சொத்தைக் கடனுக்குக் கொள்வனவு செய்வது சம்பந்தமான கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்குப் பயன் படுத்தப்படும் துணை ஏடு எது?
 1. விற்பனைக் குறிப்பேடு  2. குறிப்பேடு
 3. கொள்வனவுக் குறிப்பேடு  4. காசேடு

36. செலவு மீதிகளை மட்டும் கொண்டுள்ள கணக்கின் வகைகளைத் தெரிவு செய்க?
 1. வருமானக்கணக்கு, பொறுப்புகள்கணக்கு, உரிமைக்கணக்கு
 2. சொத்துக்கணக்கு, செலவினக்கணக்கு, வருமானக்கணக்கு
 3. சொத்துக்கணக்கு, உரிமைக்கணக்கு, பொறுப்புகள்கணக்கு
 4. செலவினக்கணக்கு, வருமானக்கணக்கு, பொறுப்புகள்கணக்கு

37. கணக்கீட்டில் வியாபாரக்கழிவு ஒரு வியாபார நடவடிக்கையாகக் கருதப்படாமைக்கான காரணம்
 1. அக்கழிவு நட்டமாகக் கருதப்படுவதால்
 2. அக்கழிவு கடன்பட்டோரின் அக்கறையை அதிகரிப்பதனால்
 3. அக்கழிவு நிறுவனத்தின் வளத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதால்
 4. அக்கழிவு நிறுவனத்தின் வளங்களில் மாற்றத்தை ஏற்படுத்தாமையினால்

38. மூலதனச் செலவின் முக்கிய இயல்புகள் எவை?
 1. மீள் விற்பனை நோக்கற்றது, உற்பத்தியின் வினைத்திறனில் பங்கெடுப்பது, நீண்டகாலப் பயன் உடையது.
 2. மீள் விற்பனை நோக்குடையது, உற்பத்தியின் வினைத்திறனில் பங்கெடுப்பது, குறுங்காலப் பயன் உடையது.
 3. நீண்டகாலப்பயன் உடையது, மீள் விற்பனை நோக்கற்றது, உற்பத்தியின் வினைத்திறனில் பங்கெடுப்பது.
 4. நீண்டகாலப் பயன் உடையது, மீள் விற்பனை நோக்கற்றது, உற்பத்தியின் வினைத்திறனில் பங்கு கொள்ளாதது.

39. கணக்கீட்டுச் சமன்பாட்டில் இருந்து புரிந்து கொள்ளப்படுவது
 1. வியாபார நடத்தையின் பெறுபேறுகளை விபரித்தல்
 2. வியாபார நிறுவனம் ஒன்றின் வளங்களும், அவ்வளங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமுறைகளும்
 3. நிறுவனமொன்றின் நிதிநிலையை விபரித்தல்
 4. வியாபார நிறுவனமொன்றின் சொத்துக்களையும், பொறுப்புக்களையும் பற்றி

40. பின்வருவனவற்றுள் சரியான கூற்று எது
 1.) சொத்துக்கணக்கு- அதிகரிப்பு வரவிலும் குறைவு செலவிலும் பதிவு செய்யப்படுகின்றது
 2) மூலதனக்கணக்கு - அதிகரிப்பு வரவிலும் குறைவு செலவிலும் பதிவு செய்யப்படுகின்றது
 3) பரிப்புக்கணக்கு- அதிகரிப்பு வரவிலும் குறைவு செலவிலும் பதிவுசெய்யப்படுகின்றது
 1. (1)உம், (2)உம் சரியானவை
 2. (1)உம், (3)உம் சரியானவை
 3. (2)உம், (3)உம் சரியானவை
 4. (1)உம், (2)உம், (3)உம் சரியானவை

**எஸ்.கே.தவநேசன்**
*ஆசிரியர்*
*அச்சுவேலி மத்திய கல்லூரி*


## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை 2002
## கணிதம் I

01. 1Kg மா ரூபா 40 ஆக இருக்கும் போது ஒருவருக்கு கிழமை ஒன்றுக்கு 5Kg மா தேவைப்படுகின்றது. தற்போது மாவின் விலை 20%ணால் அதிகரித்தால் கிழமை ஒன்றுக்கு செலவிட்ட அதேயளவு பணத்திற்கு எவ்வளவு Kg மா வாங்கலாம்?

02. சுருக்குக. $\frac{1}{x+1} + \frac{3}{x^2-1}$

03. $9^x = 243^y$ எனின் $^y/_x$ இன் பெறுமானம் யாது?

04. $P'nQ'nR'$ என்னும் பிரதேசத்தை நிழற்றுக.




05. $(a+\frac{1}{a})^2$ இன் விரிவை எழுதுக.

06. தீர்க்க. $4x^3=36x$

07. மட$_4$(மட$3^{81}$)x எனின் xஐக் காண்க?

08. r=S/3, 4r=5t எனின் S ஐ T சார்பாகத் தருக.

09. $\sin 30 = ^1/_2$ எனின் $4 \sin 30 - 2\cos 60$ இன் பெறுமானத்தைக் காண்க?

10. காரணி அறிவைப் பயன்படுத்தி பெறுமானம் காண்க?

$\sqrt{2500-(48x52)}$


11. தீர்க்க $3-\frac{1}{x+3} = 2\frac{4}{5}$

12. $y = x^2-4$ என்ற வளையியில்
 1) x அச்சை வெட்டும் புள்ளியின் ஆள் கூறுகளை காண்க?
 2) இதன் சமச்சீர் அச்சின் சமன்பாட்டை எழுதுக?

13. வரைபானது (6,5) (0,5) ஆகிய புள்ளிகளுக்கு ஊடாகச் செல்லுமாயின் சமன்பாட்டை காண்க?

14. வகுப்பு ஒன்றில் 40% ஆண்கள் ஆவர். ஆண்களில் $^2/_5$ பங்கினர் கிறிஸ்தவ மாணவர்களாவர். எஞ்சிய மாணவர்களின் எண்ணிக்கை 42 எனின் வகுப்பில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

15. உருவில் 0 வட்டத்தின் மையம்
$\measuredangle OAC = 20$ $\measuredangle OBC = 80$ எனின் பின்வருவனவற்றை காண்க?
 1) $\measuredangle A\hat{C}B$ 2) $\measuredangle A\hat{O}B$




16. $\text{Log } 10^{30} = x$ எனின் $\text{Log } 10^3$ இன் சார்பாக x ஐக் காண்க?


17. 3% பங்கு இலாபம் வழங்கும் கம்பனி ஒன்றில் 5 ரூபா பங்குகளை ரூ. 5.50 வாங்கும் சீனு என்பவருக்கு பங்கு இலாபம் கிடைத்திருப்பின்
 1) அவர் வாங்கிய பங்குகள் எத்தனை?
 2) அவர் பங்குகளை வாங்க செலவிட்ட பணம் எவ்வளவு?

18. $3x^2+bx+8=0$ என்னும் இருபடிக்கோவையில் (x-4) ஒரு காரணியாகும் எனின் bன் பெறுமானம் காண்க?

பொன்னுத்துரை- சூரியபிரகாஸ்
மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பா.

## க.பொ.த. சாதாரண தரம்

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



### பகுதி 2

I ஆவர்த்தன அட்டவணையில் அடுத்து வரும் பத்து மூலகங்களின் அணு ஆரைப் பெறுமானங்கள் தரப்பட்டுள்ளன.


| வேகம் | A | B | C | D | E | F | G | H | I | J |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அணுஆரை | 0.77 | 0.75 | 0.73 | 0.75 | 1.31 | 1.54 | 1.30 | 1.18 | 1.11 | 1.06 |

1. சடத்துவ வாயு எது? அலசன் எது?
2. A, I இன் வெளி ஓட்டில் எத்தனை இலத்திரன்கள் உண்டு?
3. ஒத்த இயல்புடைய மூலகங்கள் எவை?
4. C, G ஆகியவை சேர்ந்து உருவாக்கும் சேர்வையின் சூத்திரம் யாது? இச்சேர்வையின் இரு சிறப்பியல்புகள் தருக?
5. இவற்றுள் மிக உயர் அயனாக்கற் சக்தி உடையது எது? காரணம் தருக.
6. அயனாக்கற் சக்தி என்றால் என்ன?
   அயன் பிணைப்புச் சேர்வைக்கும் பங்கீட்டு வலுப்பிணைப்புச் சேர்வைக்கும் இடையேயான வேறுபாடுகள் எவை?.

II ஓர் அங்கி தனது இனம் அழிவடையாது பாதுகாப்பதற்காக இனப்பெருக்கத்தை மேற்கொள்கிறது.


1. தாவரங்களில் நடைபெறும் இருவகையான இனப்பெருக்க முறைகளும் எவை?
2. (அ) தன் மகரந்தச் சேர்க்கை, அயன் மகரந்தச் சேர்க்கை என்றால் என்ன?
   (ஆ) தன் மகரந்தச் சேர்க்கையிலும் பார்க்க அயன் மகரந்தச் சேர்க்கை சிறந்ததற்கான காரணம் யாது?
   (இ) தாவரங்களில் அயன் மகரந்தச் சேர்க்கை நடைபெறுவதற்குக் கொண்டுள்ள இசைவாக்கங்கள் எவை?
3. வித்து முளைத்தலுக்கு அவசியமான காரணிகள் எவை?
4. நீர் கூறிய காரணிகள் அவசியம் என்பதை உறுதிப்படுத்த எளிய பரிசோதனை ஒன்று தருக?
5. வித்துக்கள் பரம்பல் அடைவதற்கான காரணங்கள் எவை?
6. தாவரங்களை உருவாக்க இழைய வளர்ப்பு பயன்படுத்தப்படுகிறது. இதனால் ஏற்படும் நன்மைகளையும் தீமைகளையும் தருக?
7. தாவர ஓமோன்களின் பயன்கள் 4 தருக.

III மனிதனது உடலில் பதார்த்தங்களை கொண்டுசெல்ல குருதி உதவுகிறது.




1. மேலுள்ள அமைப்பு எதனைக் குறிக்கிறது?
2. படத்தில் ஆங்கில எழுத்துக்களால் குறிக்கப்பட்ட பகுதிகளைப் பெயரிடுக?
3. தடித்த சுவரையுடைய அறை எது? இவ்வாறு தடித்திருப்பதற்குக் காரணம் யாது?
4. முக்கூர், இருகூர் வால்புகளின் அமைவிடங்களைத் தருக?
5. வால்புகளின் தொழில் யாது?
6. நாடிகளிற்கும் நாளங்களுக்கும் இடையேயான பிரதான வேறுபாடுகளைத் தருக.
7. (a) இரட்டைக் குருதிச் சுற்றோட்டம் என்றால் என்ன?
   (b) மூடிய குருதிச் சுற்றோட்டத் தொகுதி என்றால் என்ன?
8. இதயத்தின் அமைவிடம் யாது?
9. இதய ஒலி யாது? இது எவ்வாறு உருவாகிறது?
10. இதயத்திற்கு குருதியை வழங்கும் குருதிக் கலன் யாது?

IV மனிதனின் காதின் கட்டமைப்பை படம் காட்டுகின்றது.




1. A, B, C, D, E, F ஆகிய பகுதிகளுக்குப் பெயரிடுக? அவற்றின் தொழில்களையும் தருக?
2. வளி மண்டலத்தில் உருவாக்கப்படும் ஒலி அலையானது மூளை வரை செல்லும் பாதையை ஒழுங்காகத் தருக?
3. நடுக்காதில் 1) அமுக்கம் கூடும், 2) அமுக்கம் குறையும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்று தருக?
4. காதின் அமுக்கத்தைப் பேண உதவும் அமைப்பு எது?
5. செவிட்டுத்தன்மை ஏற்படுவதற்கான காரணங்கள் 2 தருக.
6. இரண்டு காதுகள் எமக்கு இருப்பதால் ஏற்படும் நன்மை யாது?
7. எதிரொலி உண்டாவதற்கான நிபந்தனைகளைத் தருக?
8. தடிமன் தொற்றியுள்ள ஒருவருக்கு காது அடைப்பு ஏற்படக்கூடும். அதற்கு ஏதுவாக அமையக்கூடிய ஒரு காரணத்தைத் தருக?

V மனிதனால் பயன்படுத்தப்படும் சைக்கிள் ஒரு சிக்கற்பொறியாகும். இதன் சில பகுதிகளின் அளவீடுகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| பின்சில்லின் ஆரை | - 28cm |
| பெரிய பற்சில்லின் ஆரை | - 9cm |
| சிறிய பற்சில்லின் ஆரை | - 3cm |
| பெடல் தண்டின் நீளம் | - 14cm |

1. சைக்கிளில் காணப்படும் பொறிகள் 2 தருக?
2. இச்சைக்கிளில் பெடல் தண்டை உதைத்து ஒரு முறை சுற்றும்போது
   (a) சிறிய பற்சில்லு எத்தனை முறை சுழலும்?
   (b) சுமை எவ்வளவு தூரம் செல்லும்?
   (c) எத்தனம் செல்லும் தூரம் யாது?
   (d) இச்சைக்கிளின் வேகவிகிதம் யாது?
3. உராய்வு சைக்கிளில் ஒரு தலையீடாகவும் உதவியாகவும் இருக்கிறது
   (a) சைக்கிளில் உராய்வு தலையீடாக உள்ள இடம் ஒன்று தருக.
   (b) சைக்கிள் ஓடுவதற்கு உராய்வு எவ்வெவ் வழியில் உதவுகிறது
4. சைக்கிளில் உராய்வைக் குறைக்கப் பயன்படும் முறைகள் 2 தருக.


VI பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்தை விஞ்ஞான முறையாக விளக்குக.

1. ஐதரசன் பரவொட்சைட் கறுப்பு நிறப்போத்தலிலே வைக்கப்படுகிறது.
2. இதய அறைகளுக்கிடையே துவாரம் உடைய நோயாளி ஒருவர் பாரிய வேலைகளில் தொடர்ந்து ஈடுபடுதல் நல்லதல்ல.
3. உருகிய தார்ப்பாதை ஒன்றின் வழியே மாட்டு வண்டியும், டிராக்டர் வண்டியும் செல்லும்போது வீதியில் மாட்டுவண்டியே அதிக ஆழமுள்ள அடையாளத்தை ஏற்படுத்துகின்றது.
4. நீரில் தாழ்ந்து விடும் முட்டையொன்று உப்புக்கரைசலில் மிதக்கிறது.
5. பூமியில் உள்ள இயற்கை வளங்களை மனிதன் திட்டமிட்டு பயன்படுத்த வேண்டும்.
6. அளவுக்கதிகமான உப்பு சேர்க்கப்பட்ட உணவை உட்கொண்ட ஒருவருக்கு அதிகதாகம் ஏற்படும்.

VII 1. எரிதலுக்கு வேண்டிய நிபந்தனைகள் எவை?
2. காபன் சேர்வைகள்
   (a) குறை தகனமடையும்போது
   (b) பூரணதகனம் அடையும் போதும் உண்டாகும் விளைபொருட்களைத் தருக?
3. மெதேன் வாயுவின் சூத்திரம் $CN_4$ ஆகும். அது பூரணதகனம் அடைவதற்கான சமன்செய்யப்பட்ட இரசாயனச் சமன்பாட்டைத் தருக.
4. ஒரு சிறந்த எரிபொருள் கொண்டிருக்க வேண்டிய இயல்புகள் 2 தருக.
5. எரிபொருளின் தன் சக்திப் பெறுமானம் (கலோரிப் பெறுமானம்) என்றால் என்ன.
6. 1/2 kg விறகை எரிப்பதால் வெளிவிடப்படும் வெப்பசக்தி 200g நீரின் வெப்பநிலையை 30 c யில் இருந்து 40 c வரை உயர்த்தியது நீரின் த.வெ.கொ.அ. $4200\ JKg^{-1}\ c^{-1}$ எனவும் வெப்ப விரயம் இல்லை எனவும் கொண்டு விறகின் தன் சக்திப் பெறுமானத்தைக் காண்க.


VIII
மனிதனுக்குப் பல்வேறு தேவைகளுக்குப் பயன்படும் சக்தி, மின் ஆகும்.

1. இலங்கையின் முதன்மை மின் வழங்கல் வோல்ற்றளவு என்ன?
2. (a) வீட்டு மின் சுற்றில் மின் குமிழ்கள் எவ்வாறு இணைக்கப்பட்டிருக்கும்?
   (b) இவ்வாறு இணைக்கப்பட்டிருப்பதால் ஏற்படும் நன்மைகள் 2 தருக.
3. தரப்பட்ட மின் சுற்றின் படத்தை அவதானிக்க இதில் B எனக்குறிக்கப்பட்டுள்ளவை ஒரே மாதிரியான மின்குமிழ்கள் ஆகும். S எனக் குறிக்கப்பட்டவை ஆளிகள் ஆகும். இது தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.




   (a) ஆளி $S_1$ இடப்படும்போது ஒளிரும் மின்குமிழ்கள் எவை?
   (b) ஆளிகள் $S_1$, $S_3$, $S_4$ ஆகியன இடப்படின் ஒளிரும் மின்குமிழ்கள் எவை?
   (c) ஆளிகள் $S_1$, $S_3$, $S_4$, $S_5$ ஆகியன இடப்படும் போது ஒளிரும் மின்குமிழ்கள் எவை?
   (d) ஆளிகள் $S_1$, $S_5$ ஆகியன இடப்படும் போது ஒளிரும் மின்குமிழ்கள் எவை?
   (e) ஏதாவது ஒரு மின்குமிழ் மட்டும் அதிகூடிய பிரகாசமாக ஒளிரச் செய்ய வேண்டுமாயின் எந்த ஆளிகள் இடப்படல் வேண்டும்?
   (f) மின்கலம் ஒன்றில் மின்னியக்கவிசை 3V எனவும், மின்குமிழ்கள் ஒவ்வொன்றும் 6 $\Omega$ தடை உடையது எனவும் கொண்டு சுற்றினூடாகப் பாயும் மின்னோட்டத்தைக் காண்க.

IX மாணவன் ஒருவன் ஆய்வுகூடத்தில் மேற்கொண்ட பரிசோதனை ஒன்றின்போது பயன்படுத்திய உபகரண ஒழுங்கை கீழே உள்ள படம் விபரிக்கிறது. ஆய்வின்போது அவன் பெற்ற சில வாசிப்புக்கள்




(a) கல் வெளியில் இருந்தபோது தராசின் வாசிப்பு =50g
(b) கல் நீரில் முற்றாக அமிழ்த்தப்பட்டபோது தராசின் வாசிப்பு = 30g
(c) அளவுச்சாடியில் நீரின் ஆரம்ப மட்டவாசிப்பு =40ml

1. விற்றராசினால் பெறப்படும் வாசிப்பு குறிக்கும் கணியம் யாது?
2. கல் நீரில் முற்றாக அமிழ்த்தப்பட்ட போது தராசின் வாசிப்பில் உண்டான மாற்றம் என்ன.
3. வினா (2) இல் நீர் குறிப்பிடும் மாற்றத்திற்கான காரணம் யாது?
4. கல்லின் கனவளவு யாது?
5. (a) நீரின் அடர்த்தி $10\ kgm^{-3}$ எனில் இடம் பெயர்க்கப்பட்ட நீரின் திணிவு யாது?
   (b) அந்நீரின் நிறை யாது?
6. கல்லினால் இடம் பெயர்க்கப்பட்ட நீரின் நிறைக்கும் விற்றராசு வாசிப்புக்களின் வேறுபாட்டிற்குமிடையில் நீர் காணும் தொடர்பு யாது?
7. கல்லின் சார்படர்த்தியைத் துணிக.

சி.பாலச்சந்திரன்
பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை,
சித்தன்கேணி.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*வகைஅறச் சூழாது எழுதல் பகைவரைப்*
*பாத்திப் படுப்பதோர் ஆறு.*

*- திருக்குறள் -*

# நமது நோக்கு

## பயனுள்ள பங்கேற்பே தேவை!

வலிகாமம் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து வாழும் மக்கள்-தம்மைத் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற அனுமதிக்கக் கோரி - இன்று பேரணியொன்றை நடத்துகின்றனர்.

கடந்த 15 வருடங்களாக - வேரோடியிருந்த மண்ணிலிருந்து அகற்றப்பட்ட நிலையில் - தமது சொந்த மண்ணில் வாழும் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டவர்களாக-அகதி முகாம்களிலும், வாடகை வீடுகளிலும் தமது வாழ்க்கையை நகர்த்தும் பரிதாப நிலைக்காளானவர்களாக இவர்கள் வாடுகின்றனர்.

ஏற்கனவே - தமது நிலையை வெளியுலகிற்குக் கொண்டு சென்று நியாயம் தேட, வலி.வடக்கு மக்கள் மேற்கொண்ட முயற்சிகள் - கிணற்றில் போடட கல்லாக இருக்கும் நிலையில்,

இந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது தமது குரல் உரியவர்களை எட்டாதா? என்ற ஆதங்கத்துடன் வலி.வடக்கு மக்கள் மீண்டுமொருமுறை இன்று போராடத் தலைப்பட்டுள்ளனர்.

வலி.வடக்கின் பொது அமைப்புக்களும், நிறுவனங்களும் ஒரு சேர, நியாயந்தருமாறு கோரும் இவ் வேளையில் - எமது அரச அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் இன்றைய மக்கள் போராட்டத்திலாவது ஆக்கபூர்வமான பங்களிப்பை நல்குவார்களாக என்பது சந்தேகத்தின்பாற்பட்டதாக உள்ளது.

கடந்தமுறை - வலி.வடக்கில், மிகப்பெருமெடுப்பில் பிரபல்யம் பெற்ற - நேரடி விஜயத்தின்போது - எமது அரசியல்வாதிகள் சிலர் - மேம்போக்கான வகையில் - 'வாதாடினோம்' என்ற வரையறைக்குள் நின்று கொண்டதும், அடிப்படையான புவியியற் தரவுகளையும் புள்ளி விபரங்களையும் திரட்டிக் கொள்ளாது 'நாமும் சென்று வந்தோம்' என்ற மட்டில் நேரடி விஜயத்தில் நடந்து கொண்ட முறையும்- மக்களை அசூசைப்படுத்தியதை மறந்துவிட முடியாது.

ஏற்கனவே - முன்பொருமுறை 'நமது நோக்கில்' வலியுறுத்தியதைப் போல, வலி.வடக்கு மீளக்குடியமர்வைக் கொண்டுசெலுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டமோ, மீள் குடியமர்வை ஒருங்கிணைப்பதற்கான அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய குழுவோ - உருவாக்கப்படுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை.

மக்கள் போராடினார்கள; நாமும் பங்கேற்றோம்; ஏதோ பேசினோம்; இறுதியில் திரும்பினோம் - என்ற வெற்றுத்தனமான பங்களிப்பை எவரிடமிருந்தும் மக்கள் எதிர்பார்க்கவில்லை.

வலி.வடக்கு மக்களை மீளக் குடியமர்த்துவதில் உண்மையான அக்கறையுடையவர்கள் - அம்மக்களின் குடியமர்வுக்குத் தேவையான முழுமையான புள்ளிவிபரங்கள், புவியியல் அறிவு, அம்மக்களின் பிரச்சினைகள், வேதனைகள் என்பவற்றைத் தீர அறிந்துகொண்டே - இன்றைய போராட்டத்தில் பங்காற்ற அருகதையுடையவர்களாக வேண்டும்.

மக்கள் மீளக்குடியமர்வதை மறுக்கும் படைத்தரப்பு - தமது பாதுகாப்பினைக் காரணங்காட்டி ஒவ்வொரு நகர்வையும் மறுதலிக்கும்போது - உணர்ச்சிவசப்பட்டு வார்த்தைகளைக் கொட்டுவதை விட, மக்களின் அவலங்களை ஆணித்தரமாக, மறுப்பு எழாத வகையில் உறுதியான ஆவணங்களுடன் வாதிடக்கூடியவர்களேயே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.


இந்த வகையில்-இன்றைய போராட்டமானது, வலி.வடக்கு மக்களின் மீளக்குடியமர்வுக்கான முயற்சிகளை உந்திச் செல்லும் வகையில் - அமைந்திட அனைவரதும் ஒத்துழைப்புக் கிடைக்கட்டும்.

அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் நாடோடிகளாக வாழும் வலி.வடக்கு மக்களுக்கு இனிமேலாவது ஒரு விடிவு கிடைக்க அனைவரும் அணிதிரள்வோமாக.

# தீர்வைக் கொண்டுவரவேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது!

## சிங்கள நாடகக் கலைஞர் றோகணதேவ

*றோகணதேவ பெரேரா- சிங்களத்தில் முக்கியமானதொரு நாடக நெறியாளர். 80களில் நாடகத்துறையில் ஈடுபடத் தொடங்கிய றோகணதேவ 1995 இன் பின்னர் போர் எதிர்ப்புக் கருத்துகளைக் கொண்ட நாடகங்களை அரங்கேற்றியுள்ளார். போரின் பாதிப்புகளை அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களை கொண்டு நடத்திய நாடகங்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். 1999 இலிருந்து இவர் நெறிப்படுத்தி அரங்கேற்றிய இவரது 'கந்துலுதியே மல்பிபல' (கண்ணீரில் பூத்த மலர்கள்) 'சமலையோ இதிலதி' (வண்ணாத்திப் பூச்சிகளின் பறப்பு) 'ஒன்சசில் கீதய' (ஊஞ்சல் பாடல்) ஆகிய போர் எதிர்ப்பு நாடகங்கள் சிங்கள மக்களால் அதிகம் விரும்பிப் பார்க்கப்பட்டதுடன், புத்திஜீவிகள் அநேகரின் நல்விமர்சனங்களையும் பெற்றன. இலங்கை வானொலி - சிங்கள செய்திப் பிரிவில் கடமை புரியும் இவர் பொம்மலாட்டத்தில் திறன் பெற்றவராக, இலங்கைமன்ற பொம்மலாட்டப் பிரிவு தலைவராகவும் உள்ளார். கிளிநொச்சியில் நாடகப்பட்டறைக்கு வந்த இவருடனான உரையாடல் இது.*



றோகணதேவ பெரேரா

***கேள்வி:*** சிங்கள இனவாதிகளின் - விஜயன் கதை எப்படி சிங்கள மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது?

***பதில்:*** பௌத்த பிக்குகளால்- இனவாத சக்திகளால் கூறப்படும் விஜயனை சிங்கள மக்களுக்கு தந்தையாக்குவதை - பெரும்பாலான சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு கொள்ளைக்காரனான, தனது தேசத்தில் பெண்களை கற்பழித்தவனான, மகாமுட்டாளான, துஷ்டனான, அரைமொட்டையடிக்கப்பட்டு நாடு கடத்தப்பட்ட கெட்டவனான விஜயனை எப்படி சிங்கள மக்களால் இனத்தின் தந்தை என ஏற்கமுடியும். இனவாதிகள் கூறும் ஆரியக் கருத்தை புதிய தலைமுறைச் சிங்கள மக்கள் ஏற்கத் தயாரில்லை. பலாங்கொடையில் எலும்புக்கூடாக எடுக்கப்பட்ட 37 ஆயிரம் ஆண்டுகள் தொன்மையான மனிதனின் வம்சாவளியாக, இராவணனின் பரம்பரையினராகவே சிங்கள மக்கள் தம்மைக் கருதுகின்றனர். பலாங்கொடை மனிதனின் பரம்பரையினராக, இராவணனின் வம்சத்தினராகவே இலங்கைத் தீவில் தமிழரும் சிங்களவரும் வாழ்கின்றனர். இவர்களுக்கு எந்த ஒரு ஆரியப் பின்னணியும் இல்லை. புதிய தலைமுறை சிங்களப் புத்திஜீவிகள் இந்த ஆரியக் கருத்தை நிராகரிக்கின்றனர். மதரீதியாக பார்த்தால் - புத்தரைத் தவிர ஏனைய கடவுள்களை தமிழரும், சிங்களவரும் வணங்குகின்றனர். சிங்களக் கலைஞர்கள் சரஸ்வதியை வணங்கியே தமது ஆற்றுகைகளை ஆரம்பிக்கின்றனர். சிவன், விஷ்ணு, முருகன், பிள்ளையார், பத்தினி கடவுள்களை இரு இனத்தவருமே வணங்குகின்றனர். இதில் எப்படி ஆரியப் பின்னணி இருக்க முடியும்?

எல்லாளனை வென்ற துட்டகைமுனுவை மகாவம்சம் சிங்களம் காத்த வீரனாகக் கூறுகின்றது. வயது முதிர்ந்த எல்லாளனை - மிகுந்த இளவயது துட்டகைமுனு கொன்றதை எப்படி வீரம் எனக் கருதமுடியும்? பாளி தவிர ஆரியம் சிங்களத்தில் இல்லை.

இனவாதிகள் கூறும் வரலாறுகள் பொய்மை நிறைந்தவை என்பதை சிங்கள மக்கள் உணர்கின்றனர்.

***கேள்வி:*** இனப்பிரச்சினைக்கு இப்போதைய செயற்பாடுகள் தீர்வைக் கொண்டு வருமா?

***பதில்:*** தீர்வைக் கொண்டுவரும் என்பதை விட தீர்வைக் கொண்டு வரவேண்டும் என்ற கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது என்றே கூற வேண்டும். தற்போதுள்ள மிக மோசமான பொருளாதார நிலையும் உலக ஒழுங்குமே இன்றைய நிலைக்கு காரணமாகும். 1968 இல் சிங்கப்பூர் நாடாளுமன்றில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது அந்நாட்டு நிதியமைச்சர் - சிங்கப்பூரை இலங்கையைப்போல் வளர்க்க வேண்டுமெனக் கூறினார். ஆனால் இன்று இலங்கையில் கூறப்படுகின்றது - இலங்கையைச் சிங்கப்பூரைப போல் தரமுயர்த்த வேண்டும் என்று.

உண்மையில் இலங்கையில் இனப்பிணக்குக்கு வித்திட்டவர்கள் பிரிட்டிஷ்காரர்தான். அதிகாரம் என்பதைமையப்படுத்தி அரசியல் தலைமைகளை வளர்த்தவர்கள் அவர்களே. இன்றுவரை அந்த அரசியல் அதிகாரமே நாட்டை மிக மோசமான நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. நிச்சயமாக இன்று இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய கட்டாயத்துக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

**கேள்வி:** போரை சிங்கள மக்கள் எப்படிப் பார்க்கின்றனர்

**பதில்:** போர்- அரசியல்வாதிகளுக்கும், இராணுவ உயர் பீடத்தினருக்கும், ஆயுத முகவர்களுக்கும் இலாபத்தை வழங்கியதே தவிர - ஏனைய சிங்கள மக்களுக்கு எதுவித இலாபத்தையும் தரவில்லை. சிங்கள மக்கள் அன்றும் - இன்றும் போரை முழுமையாக எதிர்க்கிறார்கள்.

**சந்திப்பு - அறிதிரு**

# ஊடகச் சுதந்திரத்தைப் பேணும் நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு 51 வது இடம்!

(கொழும்பு)

ஊடகச்சுதந்திரத்தைப் பேணும் நாடுகளின் பட்டியலில் இலங்கை 51 ஆவது இடத்தில் இருப்பதாக எல்லைகளற் பத்திரிகையாளர் அமைப்புத் தெரிவித்துள்ளது.

ஆர்.எஸ்.எவ் என அழைக்கப்படும் இவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இத்தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் பின்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே ஆகிய நாடுகள் முதலிடத்தைப் பெற்றிருக்கின்றன. ஊடகச் சுதந்திரத்தைப் பேணும் நாடுகளில் இவையே முன்னணியில் யில் இருக்கின்றனர்.

இதேவேளை -

ஊடகங்கள் தொடர்பாக மோசமான கட்டுப்பாடுகளை விதித்து அவற்றின் சுதந்திரத்தை நசுக்கும் நாடுகளின் பட்டியலில் வடகொரியா, சீனா, துர்க்மெனிஸ்தான் ஆகிய நாடுகளை ஆர்.எஸ்.எவ் இனங்கண்டிருக்கிறது.

# கல்வியியற் கல்லூரிக் காணியை உரிமை கோரிய வழக்கு தள்ளுபடி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி- கோப்பாய் பகுதியில் முதலாவது தொகுதி கட்டடங்கள் அமைக்கப்பட்டு முடிவுறும் கட்டத்தை அடைந்திருக்கிறது.

இரண்டாவது கட்டடத்தொகுதிக்கான வேலைகள் ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளன. இந்நிலையில் கட்டட வேலைகள் ஆரம்பமாகி ஒரு வருடத்தினை அண்மித்த நிலையிலும், அதற்கான காணி பாராளுமன்ற உறுப்பினர் தருமலிங்கம் சித்தார்த்தனால் நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட 220 பரப்புக்காணி அரசினால் சுவீகரிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் கழிந்த நிலையிலும், கோப்பாயைச் சேர்ந்த ஒருவரால் இக்காணியில் இரண்டு பரப்புக்கு உரிமைகோரி கோப்பாய் பிரதேச செயலர், கிராம அலுவலர், யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது.

யாழ்ப்பாண நீதிமன்றில், விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட வழக்கை, விசாரணை செய்த யாழ். மாவட்ட நீதிபதி- தகுந்த சான்றுகள் இல்லாததால் வழக்கைத் தள்ளுபடி செய்தார். வழக்குக்கான செலவுத் தொகையை வழக்காளி செலுத்த வேண்டுமெனவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.



# குறைதீர் மன்றம்

எனது சிரேஷ்ட மகளை ஜேர்மனியில் தற்போது வதியும் எனது கிராமத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபா பணமும் 10 பவுண் நகையும் சீதனமாகக் கொடுத்து 1999ஆம் ஆண்டு திருமணம் செய்து வைத்தேன். திருமணம் முடிந்து ஒரு மாதத்தின் பின் ஜேர்மனி சென்ற குறித்த வாலிபர், எனது மகளை 3 மாதங்களில் அழைப்பதாகக் கூறியபோதும் இன்றுவரை எவ்வித பதிலும் இல்லை.

நாங்கள் தொடர்புகொண்டு விசாரித்தபோது தான் இனிமேல் எங்கள் மகளை ஏற்கப் போவதில்லை எனக் கூறிவிட்டார்.மறுபுறத்தில் இவ்வாலிபனது பெற்றோர் வேறொரு பெண்ணைத் திருமணம் பேசி ஜேர்மனிக்கு அனுப்பி வைத்துள்ளனர். இது தொடர்பாக நாங்கள் சென்று விசாரித்தபோது எமக்கு ஆத்திரம் ஊட்டும் வகையில் பதிலளித்து வருகின்றனர். இந்நிலையில் எனது மகளின் பரிதாப நிலையைக் கருத்திற்கொண்டு யாது செய்யலாம்?

திருமதி.இ.மாகிறற்,
உரும்பிராய்.

**நமது ஈழநாடு**

தங்களால் எமது குறைதீர் மன்றத்துக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் தங்கள் பிள்ளைக்கும், குறித்த ஜேர்மனியிலுள்ள வாலிபருக்கும் சிவில் திருமணமாகிய பதிவுத் திருமணம் நடைபெற்றதனைப் பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. தங்களது விடயத்தை மேலும் கையாள்வதற்கு இத்திருமணம் பதிவு செய்யப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்தும் திருமணப் பதிவுச் சான்றிதழுடன்- இலக்கம் 79, வேம்படி றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலமைந்துள்ள இலவச சட்ட ஆலோசனை வழங்கும் நிறுவனத்தில், சட்ட ஆலோசனைகளை பெறுவதற்கு காலை 10.30 மணிக்குநேரில் வருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

# மக்களின் வரிப்பணத்தில் சேவையாற்றுபவர்கள் அந்த மக்களையே உதாசீனப்படுத்த முடியாது!

*பொதுமக்களின் வரிப்பணத்தில் வேதனம் பெறுவோரே பொலிசார். பொதுமக்களுக்கான சேவையை நெறிபிறழாது ஆற்றி சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியவர்கள் அவர்கள். அதற்குப் பொதுமக்களின் முழுமையான ஒத்துழைப்பு இன்றியமையாதது.' தற்போது நிலவும் சூழ்நிலையில் பொலிசார், பொதுமக்கள் நட்புறவு வலுப்பட்டு வருவது மகிழ்ச்சியளிக்கிறது என்கிறார் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (S.S.P) பி.எம்.பிரேமரத்ன. 'நமது ஈழநாடு'க்கான அவரது நேர்காணலுக்கான ஏற்பாட்டினை தெல்லிப்பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரமேந்திர பெர்ணாண்டோ செய்திருந்தார்.*




கேள்வி:யாழ்.மாவட்டத்தில் யுத்த நிலை நிலவிய வேளையிலும், தற்போது அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாகியுள்ள சுமுக சூழ்நிலையிலும் பொலிசார்-பொதுமக்கள் உறவுநிலை எவ்வாறு உள்ளது என்பது பற்றி என்ன கூற விரும்புகின்றீர்கள்?

*பதில்:* யுத்த சூழ்நிலையில் பொலிசார் தமது கடமைகளைச் செய்வதில் பல தடங்கல்களை எதிர்கொள்ள நேரிட்டது. பொதுமக்கள் பொலிஸ் நிலையங்களில் தம்மது முறைப்பாடுகளைச் செய்தாலும் கூட, பொலிசாரால் உடனுக்குடன் அவைபற்றி விசாரணை புரிந்து நடவடிக்கை மேற்கொள்ளக்கூடியதான அனுகூலமான வாய்ப்புகள் மிக மிகக் குறைவாகவே இருந்தன. எதற்கும் அவ்வப் பகுதி கிராம சேவகர் ஊடாகவே அறிவித்தல் மூலம் வாதி, பிரதிவாதிகள் பொலிஸ் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டன. இதனால் விசாரணைகளில் தவிர்க்க முடியாத தாமதங்களும் ஏற்படத்தான் செய்தன. ஆனால் நிலைமை இன்று அப்படியில்லை. கிராமசேவகர் களின் உதவிகள் நாடப்பட்டாலும் கூட பொலிஸ் நிலையங்களில் விசாரணைகள் துரிதகதியில் நடத்தப்படுகின்றன. சிறு சிறு பிணக்குகள் இரு சாராரினதும் இணக்கத்துடன் சுமுகமாகத் தீர்த்து வைக்கப்படுகின்றன. நீதிமன்ற விசாரணைக்கு உட்பட வேண்டிய பிணககுகள், சம்பவங்கள் என்பன நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்படுகின்றன.

மேலும் பொலிஸார் மீது தற்போது பொதுமக்களுக்கு நம்பிக்கையும், நட்புறவும் வலுப்பட்டு வருகின்றது. பொலிசார் மூலம் தமது பிரச்சினைகளுக்குச் சுமுகமான தீர்வு காண முடியும் என்று பொது மக்கள் நம்புகின்றார்கள். இதன் மூலம் பொலிசார், பொதுமக்களிடையே தற்போது சௌஜன்ய நிலை மேம்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது.

கேள்வி:- பொதுமக்கள் தமது முறைப்பாடுகளைப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்து விசாரணைகளை எதிர்கொள்ளும்போது தமிழ் தெரிந்த பொலிசார் இல்லாமையால சங்கடத்தை அனுபவிக்க நேரிடுவதாகக் கூறப்படுவது பற்றி...?

*பதில்:-* உண்மைதான். தமிழ் தெரிந்த பொலிசார் குறைந்த அளவிலேயே தற்போது உள்ளனர். எனினும் இயன்றளவு பொதுமக்களின் நிலையைப் புரிந்துகொண்டு பொலிசார் செயற்படுவதனை மறுக்கமுடியாது. இக்குறைபாட்டை நீக்க பொலிஸ் தலைமைப்பீடம் தற்போது நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

நாளடைவில் தமிழ் தெரிந்த பொலிசார் கூடுதலாகக் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

கேள்வி:- தற்போது நிலவும் சுமுக சூழ்நிலையில் தென்னிலங்கை வாகனங்களும் நாளாந்தம் பெருமளவில் குடாநாட்டுக்குள் பிரவேசிக்கின்றன. இங்குள்ளோரும் புதிதாக வாகனங்களைக் குறிப்பிடத்தக்களவு தத்தம் தேவைகளுக்குக் கொள்வனவு செய்து கொண்டுள்ளனர். இதனால் நகரப் பகுதியிலும் மற்றும் பிரதான வீதிகளிலும் வாகன நெரிசல் அதிகரித்துள்ளது. மக்கள் கூட்டம் அதிகமுள்ள பகுதிகளில் விபத்துக்களும் நிகழ்ந்து வருகின்றன. இந்த நிலையில் பொலிசார் மேற்கொள்ளும், மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகள் குறித்து விபரிப்பீர்களா?

*பதில்:-* தற்போதெல்லாம் சாரதி அனுமதிப்பத்திரமில்லாத, உரிய சாரதியப் பயிற்சி பெறாத பலரும் வாகனங்கள் செலுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு உரிய ஆவணங்களின்றி வாகனம் செலுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது தவிர்க்க முடியாதது. முன்னர் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதில் தாமத நிலை ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இனறு அப்படி ஒரேயடியாகக் கூறி விடுவதற்கில்லை. சாரதியப் பயிற்சி இல்லாமல் வாகனங்களைச் செலுத்துவோரால்தான் அதிகளவு விபத்துக்கள் ஏற்படுகின்றன. அத்துடன் அதிவேக ஓட்டமும் இதற்குக் காரணமாகின்றது. பயணிகள் வாகனங்களில் கூடுதல் பயணிகள் ஏற்றப்படுதல், மிதிபலகைப் பயணம் என்பனவும் விபத்துக்கள் நிகழ ஏதுவாகின்றன. இத்தகைய நிலை நீடிப்பதை அனுமதிக்க முடியாது, போக்குவரத்துப் பொலிசார் இது விடயத்தில் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்வர். இதற்குச் சமூகத்தின் சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமாகின்றது. ஒத்துழைப்புக் கிடைக்குமென்ற நம்பிக்கை உண்டு.



பி.எம்.பிரேமரத்ன
யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

கேள்வி:- பொலிசாரென்றால் அதிகாரம் செலுத்துபவர்கள், மக்களின் மனோநிலையைப் புரிந்து கொள்ள பின்நிற்பவர்கள் என்ற கருத்து நிலவுகிறதே. இது பற்றி தாங்கள் கூற விழைவது என்ன?

*பதில்:-* இக்கூற்றை நான் முற்று முழுதாக மறுக்கின்றேன். இப்படிக் கூறுவது மிகக் குறைந்தளவினர், ஒரு சிறுசாரார் என்றிருக்கலாம். இது அவர்களது அறியாமையே. ஆனால் பொலிஸ் சேவை என்பது புனிதமானது. பொலிஸ் சேவைக்குத் தகுதியுள்ளோரே அவர்களின் தரமறிந்து சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அவர்களுக்கு ஆரம்பத்தில் உரிய பயிற்சியளிக்கப்படுகின்றது. ஒரு சிலர் கட்டுப்பாடு மீறிச்செயற்பட்டாலும் கூட அவர்கள் மீது மேலிடம் உடனடியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் தயங்காது. மக்களின் வரிப்பணத்தில் வேதனம் பெறும் பொலிசார் எவ்விதம் பொது மக்களை உதாசீனம் செய்து செயற்பட முடியும்? பொலிசார் பொதுமக்களின் நண்பர்களே. சட்டம், ஒழுங்கை நிலை நாட்டுவதில் பொதுமக்கள் பொலிசாருக்கு முழுமையான ஒத்துழைப்பினை வழங்கினால் சமூகத்தில் கணிசமான அளவு குற்றச்செயல்களை நிச்சயமாகக் குறைக்கலாம்.

கேள்வி:- யாழ்.நகரப்பகுதியிலும் புறநகர்ப்பகுதிகளிலும் வாலிபர்கள் சிலர் பல்வேறு வகைகளில் இளம் பெண்களுக்கும், பொதுமக்களுக்கும் அநாவசியமான தொல்லை கொடுத்து வருவதாகக் கூறப்படுகின்றது. இது பற்றி....

*பதில்:-* பொதுமக்களின் அமைதி வாழ்வுக்காக பொலிசார் சகல வழிகளிலும் உதவத்தயாராக இருக்கின்றார்கள். இத்தகைய சம்பவங்கள் எதுவும் நிகழுமிடத்து ஆதாரத்துடன் பொலிசாரிடம் முறைப்பாடு செயயப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இது விடயத்தில் பொதுமக்கள் அசமந்தமாக இருந்தால் பொலிசாரால் எவ்விதம் நடவடிக்கை மேற்கொள்ள முடியும்?

கேள்வி:-பொதுவாக, யாழ்.மக்களுக்கு தாங்கள் கூற விரும்பும் செய்தி என்ன?

*பதில்:-* யாழ்ப்பாண மக்கள் விருநதோம்பல் பண்புள்ளவர்கள். கல்வியையும், கடவுள் நம்பிக்கையையும் பேணிககாப்பவர்கள். வீணான பண்டவிரயம் செய்ய விரும்பாதவர்கள். எதிர்காலப் பொறுப்புணர்ந்தவர்கள். தற்போது நிலவும் அமைதிச் சூழ்நிலை நீடித்து நிலைக்க வேண்டும் என்பது அவர்களது பேரவாவாக உள்ளதை மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது. சகல இன மக்களுடனும் நட்பை அவர்கள் விரும்புகின்றனர். மிக நீண்டகாலமாக இனங்களுக்கிடையே நிலவிவந்த பரஸ்பர புரிந்துணர்வின்மை தற்போது நீங்கி வருவது நாட்டு மக்கள் அனைவருக்குமே மகிழ்ச்சி தருகின்றது. வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் (D.I.G.) எட்வேட் விதாரணவின் நெறிப்படுத தலிலும், யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரான (S.S.P) எனது வழிநடத்தலிலும் பொலிஸ் அதிபர், உதவிப்பொலிஸ் அதிபர் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மக்களுக்கான சேவை மேன் மேலும் சிறப்புற நிகழும் என்பதனை உறுதியாக தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். பொதுமக்களின் முழுமையான ஒத்துழைப்பினை நாம் பெரிதும் நாடிநிற்கின்றோம். ❖

**நேர்காணல்:-ஸ்ரீநடா**

# இனியும் நடக்காதிருக்கட்டும் இப்படியான விபத்துக்கள்!

காலை 10.45 மணி, திங்கட்கிழமை (28.10.2002) மழை சற்றுத் தூறிக் கொண்டிருந்தது. கொக்குவில் பூநாறி மரத்தடிச் சந்திக்கு அண்மையாக நூற்றுக்கணக்கான மக்கள் கூடி நின்று, தமது அதிருப்தியை மௌனமாக ஒருவருடன் ஒருவர் முணுமுணுத்தபடி நின்றனர். வீதியோரத்தில் சேதமுற்று வீழ்ந்து கிடந்த மோட்டார் சைக்கிள், ஆங்காங்கே சிதறிக் கிடந்த தலைக் கவசங்கள்; வேறு பொதிகள், சக்கரங்கள் ஓரிடத்தில் கிடக்க, சப்பளிந்து நெளிந்த முச்சக்கரவண்டி, பின்புறம் நெளிந்து சேதமுற்ற மினிபஸ் என.... ஏதோ பெரும் பயங்கரத்துள் அந்த இடம் மூழ்கடிக்கப்பட்டிருந்தது.

தற்செயலாக அங்கு வந்திருந்த போக்குவரத்துப் பொலிஸார், முன்னரே காயப்பட்ட அனைவரையும் வாகனமொன்றில் மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு கூடியிருந்தவர்களைக் கலைந்து செல்லுமாறு உத்தரவிட்டபடியிருந்தனர். ஆனால் எவரும் நகரவில்லை.

மிக நெருக்கடியான போக்குவரத்து மிக்க காங்கேசன்துறை வீதியில், சமாதான காலத்திலும் ஏதோ யுத்தகள அவசரத்தில் செல்வது போன்ற கண்மூடித்தனமான வேகத்தில் இராணுவ வாகனங்கள் செல்வது பற்றி மிகவும் ஆதங்கத்துடன் கருத்து வெளியிட்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர், இவ்வாகன விபத்திற்கு இடையில் தான் அகப்படுவதிலிருந்து மயிரிழையில் தப்பியதாகத் தெரிவித்தார். இராணுவ வாகனங்கள் மட்டுமல்ல - தலைதெறிக்க ஓடும் டொல்பின்களும், லொறிகளும், மோட்டார் சைக்கிள்களும் பயப்பீதியை ஏற்படுத்துகின்றன எனவும் அவர் கூறினார்.

சம்பவம் நடந்த அதே இடத்தின் முன்புற வாசலில் நின்று நேரடியாக விபத்தைப் பார்த்த சிறுவன் அதிர்ச்சியில் கண்கள் கலங்கியவாறு வாய் தடுமாறினான்.




சிங்களத்தில் 'இராணுவம்' எனக் குறிக்கபட்ட 6326 என்ற இலக்கமுடைய ட்ரக் வண்டி, யாழ். நகரிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்த தங்களது மினிபஸ்ஸின் பின்புறமாக வந்து ஒரு மூலைப் பகுதியில் சடுதியாக மோதியது என்றும், மோதிய பிறகும் மிகை வேகத்தில் சென்று அடுத்த சில வினாடிகளுள் எதிர்த்திசையில் வந்துகொண்டிருந்த முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிளையும் மோதியதைத் தன்னுடன் மினிபஸ்ஸிலிருந்த பயணிகள் அனைவரும் கண்டு 'ஐயோ' என்று குழறியதாகவும், ஆனால் தெய்வாதீனமாக உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்தார் மினிபஸ் நடத்துநர்.

சனக்கூட்டத்துக்கிடையில் சலனமற்று மௌனமாக நின்ற அந்த இரண்டு இராணுவச் சிப்பாய்களும் தமது ட்ரக் வண்டிக்குள் நெளிந்து சப்பளிந்த ஓட்டோவையும் சக்கரங்களையும் ஏற்றிக்கொண்டு புறப்பட ஆயத்தமாகினர்.

மருத்துவமனைக்குச் சென்று காயமடைந்த ஆசிரியர்களான வேதநாயகம் ஜோண்சன், மங்களம் மணிசேகரன் ஆகியோரைச் சந்தித்தோம்.

அதிர்ச்சியிலிருந்து மெல்ல மெல்ல மீண்ட நிலையில், தாம் உயிர் தப்பியதற்காக ஆண்டவனுக்கு நன்றி செலுத்துவதாக அவ்விரு ஆசிரியர் களும் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிரதான வீதிகளில் இராணுவ வாகனங்கள் சம்பந்தப்படுகின்ற வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

"போர்க்காலத்தில் துப்பாக்கி வேட்டுக்களாலும் எறிகணைகளாலும் பொருளாதாரத்தடை, மருந்துத் தடை என்பவற்றால் பல இன்னல்களை அனுபவித்த தமிழர்கள், சமாதான காலத்திலும், போர்நிறுத்த காலத்திலும் இராணுவ வாகனங்களால் விபத்துக்குள்ளாகி காயப்படுவதும் கொல்லப்படுவதும் தொடர்கதையாக இருப்பதையிட்டு மக்கள் மிகுந்த வேதனையும் விசனமும் அடைகின்றனர். சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்திற் கொள்ள வேண்டும். குறிப்பாக இவ்விடயத்தில் உயர் இராணுவ அதிகாரிகள் தீவிர கவனஞ் செலுத்த வேண்டும்."

- இப்படித் தெரிவிக்கிறார் சமூகத்தின் மூத்த பிரஜை ஒருவர்.

**- எதிரொலி.**

## இளையதம்பி வித்தியாலயம் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

இளையதம்பி இந்து வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் மு.செல்லையா தலைமையில இடம்பெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொள்வார்.

## கணினிப் பயிற்சி நிலையங்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)


யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அனைத்து கணினிப் பயிற்சி நிலையங்களின் ஆலோசனையைப் பெற்று சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேச மாணவர்களின் கணினி அறிவினை விருத்திசெய்வது தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை காலை 11மணிக்கு சர்வதேச மாணவர் பேரவையின் தலைமைக் காரியாலத்தில் நடைபெறவுளளது.

## தமிழ்க் காங்கிரஸ் கிளை புனரமைப்புக் கூட்டம்

(நமது நிருபர்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் நெல்லியடிக் கிளை புனரமைப்புக் கூட்டம் எதிர்வரும் நவம்பர் 3ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 3மணிக்கு கட்சியின் தலைவர் விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்த மாநாட்டிலிருந்து...


யாழ். செயலகத்தில் நடைபெற்ற உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான மாநாட்டில் பங்குபற்றியோரை முதலாவது படத்திலும், பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மாவை சேனாதிராஜா, அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் ஆகியோரை இரண்டாவது படத்திலும் யாழ்.நகர வரைபடத்தை காட்டி மாநாட்டில் பங்குபற்றியோருக்கு விளக்கம் கொடுக்கும் இராணுவ அதிகாரியையும் அவரது உதவியாளரையும் மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள் - லிவிங்ஸ்ரன்)




யாழ்.மாவட்ட பிரதிக் கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் ரட்ணசபாபதி




கடற்படை அதிகாரி கொமோடர் ஒபேசிங்க




யாழ்.நகர பிரதேசத்துள் பொறுப்பு வகிக்கும் இராணுவ அதிகாரி மேஜர் சந்தன



நாகர்கோவில் உயர் பாதுகாப்பு வலயம் பற்றி மாவை சேனாதிராஜாவுக்கு இராணுவ உத்தியோகத்தர் விளக்கமளிக்கின்றார்



நாகர்கோவில் உயர் பாதுகாப்பு வலயத்தால் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை மாநாட்டில் பங்குபற்றியவர்களுக்கு அரச அதிபர் விளக்குகின்றார்.



அதே உயர் பாதுகாப்பு வலயத்தால் அரச உத்தியோகஸ்தர்களுக்கும் மக்களுக்கு ஏற்படும் போக்குவரத்து நெருக்கடிகளை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் விளக்குகின்றார்.

## நாகர்கோவில் பாதுகாப்பு வலயம் மக்கள் மீளக்குடியமர முடியாது!

### படை அதிகாரிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நாகர்கோவல் உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்க முடியாது என இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான மாநாட்டுக்குச் சமூகம் அளித்திருந்த நாகர்கோவல் பாதுகாப்பு நடவடிக்கைக்குப பொறுப்பாகவுள்ள இராணுவ அதிகாரிகள், அப்பாதுகாப்பு வலயம் குடாநாட டின் ஒரு முன்னரங்க நிலையென்பதைக் சுட்டிக்காட்டி, வரைபடங்கள் மூலம் தெளிவுபடுத்தினர்.

மருதங்கேணி பிரதேச செயலாளர், தமது செயலகம் தயாரித்திருந்த வரைபடத்தின் மூலமாக நாகர் கோவில், மருதங்கேணிப் பிரதேசங்களின் நிலைமைகளை விளக்கினார்.

அப்பிரதேசத்தைச் சேர்ந்த கிராம அலுவலர் ஒருவர் உயர் பாதுகாப்பு வலயத்துள் இயங்காத நிலையிலுள்ள மருத்துவமனை மறறும் விவசாயத்துறை சார்ந்த திணைக்களம் ஆகியன இயங்க இராணுவம் அனுமதி வழங்கினால், மக்களின் பிரச்சினைகள் ஓரளவு தணியலாம் எனச் சுட்டிக்காட்டினார்.மருத்துவமனையை இயங்குவதற்கு அனுமதிப்பது பற்றிப் பாசீலித்தே முடிவு கூறமுடியும் எனத் தெரிவித்தார், அப்பிரதேசத்தின் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இராணுவ அதிகாரி. அவரது கருத்தை ஆமோதித்து ஏற்றுக்கொண்டார். மேஜர் ஜெனரல் இரட்ணசபாபதி.

தொடர்ந்து நாகர்கோவில் மீனவர் சங்கப் பிரதிநிதியொருவர், தாங்கள் தமது சொந்தப் பிரதேசத்தில் கரைவலை மீன்பிடியை செய்து வந்ததாகவும் அதற்காக நாகர்கோவில் கரையில் கொட்டோடைப் பிரதேசத்தையாவது அனுமதிக்கும் படியும் கேட்டுக் கொண்டார். ஆனால் அக்கோரிக்கையை உடனடியாகவே நிராகரித்தார் மேஜர் ஜெனரல் இரட்ணசபாதி.

நீடித்த கோரிக்கைகளும், அதற்கான மறுப்புக்களுமாக நாகர்கோவில் உயர்பாதுகாப்பு வலய விவகாரம் அமைந்தது.

நாகர்கோவில் பாதுகாப்பு வலய விவகாரம் தொடர்பாக ஆரம்பத்தில் அரசாங்க அதிபர் சில விடயங்களைச் சுட்டிக்காட்டியிருந்தார். மீள்குடியேற்றம், பொதுச்சேவை, அதிகாரிகளின் போக்குவரத்து, பொதுமக்கள் நடமாட்டம், போக்குவரத்து என்பனவே அவை A-9 வீதிக்கு சில கிலோ மீற்றர்கள் பிரயாணம் செய்து வந்து சேருவதற்குப் பதிலாக முப்பது கிலோமீற்றர் சுற்றியே மக்கள் வருகிறார்கள் எனபதும் அரசாங்க அதிபரால் சுட்டிக் காட்டப்பட்டது.

எனினும் இறுதியில் நாகர்கோவல் உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான விடயங்களில் மக்களுக்கு நன்மையளிக்கும் எந்த முடிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## ஒஸ்ரின் பெர்ணான்டோ மாநாட்டிற்கு வரவில்லை

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான படை அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நிர்வாக அதிகாரிகள், சமூகப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாட்டுக்குப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸரின் பெர்ணான்டோ வருகை தருவார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவர் அங்கு பிரசன்னமாயிருக்கவில்லை. மாநாட்டுக்கு இவர் வருகை தராமைக்கான காரணங்கள் குறித்துத் தெரியவரவில்லை.

## மீன்பிடிக் கட்டுப்பாடு தளர்வு? இன்னமும் முடிவு இல்லை!

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் காரைநகர்- ஊரி கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதி- தாம் சமாதான சூழ்நிலை ஏற்பட்ட பின்னரும் இரவு நேர மீன்பிடிக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார். பாஸ் முறைமை காரணமாக, தாங்கள் பரந்துபட்ட முறையில் மீன்வளம் நிறைந்த நேரத்திலோ, பருவத்திலோ மீன்பிடியை மேற்கொள்ள முடியாமல் உள்ளது எனத் தெரிவித்தார்.

பொருத்தமான நேரத்தில் தாங்கள் கரைசேர முடியாமல் உள்ளதனால் சந்தைப்படுத்தவும் முடியவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதேச செயலர் மட்ட கலந்துரையாடல்களில் மீனவர்கள் கடற்படை உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றும் சந்தர்ப்பங்களில் இவ்விடயங்கள் பற்றி ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்படுவது பொருத்தமாக அமையும் எனக் கடற்படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இரவு நேர மீன்பிடிக்குப் பொதுவாக இப்பொழுது அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவசர சந்தர்ப்பங்களில் மட்டும் இரவில் கரைக்குத் திரும்ப அனுமதி உண்டு என்றும் அவர் தெரிவித்தார். இவ்விடயங்களில் பிரச்சினைகள் இருப்பின் பிரதேசரீதியாகக் கலந்துரையாடித் தீர்க்கவேண்டும். அவ்வாறான அவசர சந்தர்ப்பங்களில் கரைக்குத் திரும்ப எத்தனிக்கும் மீனவர்களுக்கு ஆபத்துக்கள் விளைவதைத் தடுக்கவேண்டும் எனச் சுட்டிக் காட்டப்பட்டது. அதற்காக ஒளிச் சைகைகள் போன்றவற்றைப் பயன்படுத்துவது பற்றி ஆராயப்பட்டது, எனினும் இறுதி முடிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இரவு நேர மீன்பிடி சில இடங்களில் அனுமதிக்கப்படாமல் உள்ளமை பற்றி மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தமது கவலையை வெளியிட்டனர். எனினும் உயர் பாதுகாப்புத் தேவைகள், காரணங்களை கடற்படை அதிகாரி சுட்டிக்காட்டி தனது மறுதலிப்பை வெளியிட்டார். காரைநகர்- ஊரிக் கடற்பிரதேச மீன்பிடியானது விசேட பாதுகாப்புத் தேவைகளுடன் சம்பந்தப்பட்டது என்றும் அவர் கூறினார். குருநகர், பாசையூர் மீனவர்கள் பண்ணைப் பாலத்துக்கு மேற்காகச் சென்று மீன்பிடிக்க அனுமதிக்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை முன வைக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பாகவும் ஆராய்ந்தே முடிவு சொல்லலாம் எனக் கடற்படை அதிகாரி கூறினார்.

எத்தனை படகுகளில், எத்தனை மீனவர்கள் செல்கிறார்கள், அவர்களது பெயர் விபரங்கள், பயன்படுத்தும் சாதனங்களின் விபரங்கள் ஆகியவற்றைச் சமர்ப்பிக்கவேண்டிவரும் எனவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் மீனவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளிருப்பின் அவற்றை உரிய பிரதேச செயலர், கடற்படை அலுவலர்கள், மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்துத் தீர்த்துக் கொள்ளலாம் எனவும் கடற்படை அதிகாரி தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

CES COMPUTERS ELECTRONIC SYSTEMS (PVT) LTD

- கணினியில் முன்னனுபவம் இல்லாதவர்களிற்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், games, மற்றும் விசேட வகுப்புக்கள்.

கணினி உலகில் முன்னணியில் திகழ இன்றே நாடுங்கள்!!

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223, Kasthuriyar Road,
Jaffna.
(Near J/Hindu Primary School)

விண்ணப்ப முடிவுத் திகதி:
15.12.2002

# வலி.வடக்கு மீள் குடியேற்றம் பாதுகாப்புடன் தொடர்புடையது

## யாழ். இராணுவ பிரதித்தளபதி ரட்ணசபாபதி கூறுகின்றார்

உயர் பாதுகாப்பு வலயம் தொடா பாக நேற்று செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில், வலிகாமம் வடக்கு மக்களின் மீள் குடியேற்ற விடயத்துக்கு தமது பாதுகாப்பு அக்கறைகளைக் கவனியாது முடிவெடுக்கக் கூடிய நிலையில் இரா ணுவத்தினர் செயற்பட முடியாது என யாழ்.மாவட்ட பிரதி கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் ரட்ணசபாபதி தெரிவித்தார்.

தெல்லிப்பளையில் உயர் பாதுகாப்பு வலய முன்னரங்கை அஞ்சல் அலுவலகம் இருந்த இடம் வரையாவது பின்தள்ள முடியாதா? எனப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டனர். அவ்விடயத்திற்கு இராணுவத்தரப்பால் மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.

அதனையடுத்து சில பகுதிகளில் விவசாய நிலங்களையாவது பயிர்ச் செய்கைக்கு அனுமதிக்க முடியுமா எனக் கேட்டபோது மிதி வெடிகள் தொடர்பான பிரச்சினைகளை சுட்டிக் காட்டிய இராணுவத்தரப்பு அது தொடர்பான நடைமுறை நெருக்கடிகளை எடுத்துக்கூறியது.

### இன்றைய பேரணிக்கு இராணுவம் இடையூறு தராதென உறுதி!

இன்று நடைபெறுகின்ற வலிகாமம் வடக்கு மக்களின் பேரணி தொடர்பாக நேற்றைய செயலக மாநாட்டில் மாவை சேனாதிராசா மேஜர் ரட்ணசபாபதிக்கு எடுத்துக் கூறினார். மக்களின் ஜனநாயகரீதியிலான எதிர்ப்பு நடவடிக்கையை குழப்பும் வகையில் செயற்படாமல் இருக்கும்படி மாவை சேனாதிராசா சுட்டிக் காட்டினார். அதற்கு- வலி வடக்கு மக்களின் பேரணி தொடர்பாக இராணுவத்தினர் எவ்வித இடையூறுகளையும் தரமாட்டார்கள் என மேஜர் ஜெனரல் உறுதியளித்தார்.



புதுக்குடியிருப்பில் புறப்படுவதற்கு முன் புலிகளின் முக்கியஸ்தர்களும் பிரதிநிதிகள் குழுவும் படத்தில் காணப்படுகின்றனர்



கேணல் தீபன், கேணல் பானுவுடன் கேணல் கருணா

### பாதுகாப்பு ...

கும் இடையில் நேற்றுக் காலை யாழ்.செயலகத்தில் இம்மாநாடு நடைபெற்றது.

நேற்றுக்காலை பதினொரு மணிக்கு ஆரம்பமான இந்த மாநாட்டுக்கு - யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமை வகித்தார். பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் மக்களின் சார்பில் விடயங்களை முன்வைத்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட மீனவர் சங்கங்கள், விவசாய சங்கங்கள், மத அமைப்புக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அங்கு வருகை தந்திருந்தனர்.

இராணுவத்தரப்பில் யாழ். மாவட்ட பிரதிக் கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் ரட்ணசபாபதி, வடக்குக்கான கடற்படையின் பிரதிக் கட்டளை அதிகாரி கொமோடர் ஒபேசிங்க ஆகியோருடன் நாகர்கோவில் உயர்பாதுகாப்பு வலயத்துக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிகள், யாழ்ப்பாண மாநகரத்தின் கடற்கரைப் பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள இராணுவப் பிரிவுகளின் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இம்மாநாட்டில் - வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக் குடியேற்றுதல் தொடர்பான விடயங்கள், நாகர் கோவில் உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களின் மீள்குடியேற்றம், மீனவர்களுக்கான 'பாஸ்' முறையை நீக்குதல், யாழ்ப்பாண மாநகரத்துக் கடற்கரையோரக் கிராமங்கள் மற்றும் அரியாலை, பூம்புகார் போன்ற பிரதேசங்களுக்கு மக்கள் மீள அனுமதிக்கப்படுதல் உள்ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டன.

முக்கிய முடிவுகள் வெளியாகலாம் என முதலில் எதிர்பார்க்கப் பட்ட போதிலும், எதிர்பார்க்கப்பட்ட அளவு விவகாரங்கள ஆழமாகவோ, விரிவாகவோ அங்கு ஆராயப்படவில்லை. அத்துடன் ஆராயப்பட்ட விவகாரங்களிலும் மிக அரிதாக ஓரிரு விடயங்கள் தவிர்ந்த, மிகுதி பிரதான விடயங்கள் எதிலும் பொது மக்களுக்குச் சாதகமான எந்த முடிவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

மீனவர்களின் பாஸ் முறைமை தொடர்பாகவே கடற்படை அதிகாரி ஒருசில சாதகமான வாக்குறுதிகளை அளித்தார்.

*(மேலதிக படங்களும் தகவல்களும் உள்ளே)*

# அரசாங்க தரப்பின் ஒரு சாரார் நேற்றே தாய்லாந்து சென்றனர்

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தாய்லாந்தில் நடைபெற இருக்கும் இரண்டாம் சுற்று பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக அரசாங்கப் பிரதிநிதிகளில் ஒரு சாரார் நேற்றுக் காலையே தாய்லாந்து புறப்பட்டுச் சென்றனர்.

சமாதான செயலகத்தின் பணிப்பாளர் நாயகம் பேனாட் குணதிலகவுடன் மேலும் மூன்று பிரதிநிதிகள் பயணமாகியுள்ளனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னிட்டு அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட, சமாதான செயலகத்தைச் சேர்ந்து ஜோன் குணரத்ன மற்றும் சானக ஜயசேகர ஆகியோரே பயணமாகியுள்ளவர்களாவர்.

# தீவகம் சென்ற பெண் போராளிகள் அல்லைப்பிட்டியில் தடுத்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

தீவகப்பகுதிக்குச் சென்ற இரு பெண் போராளிகள் நேற்று அல்லைப்பிட்டியில் வைத்து கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். இவர்கள் தம்முடன் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் சீருடையில் நிற்கும் படங்களை வைத்திருந்தமையால் தொடர்ந்து செல்ல அனுமதிக்கவில்லை என கடற்படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

காலை 8 மணி முதல் ஒன்பதரை மணி வரை இப்பெண் போராளிகள் அல்லைப்பிட்டியில் தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். இரு தரப்பினரிடையேயும் வாக்குவாதம் நிகழ்ந்த போதும் கடற்படையினர் இவர்களைத் தொடர்ந்து செல்ல அனுமதிக்கவில்லை. இறுதியில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் வரவழைக்கப்பட்டு அவர்களது சமரச முயற்சிகளைத் தொடர்ந்து இரு பெண் போராளிகளும் தம்முடன் எடுத்து வந்திருந்த படங்களுடன் தீவகம் செல்ல கடற்படையினர் அனுமதித்தனர்.

### புலிகள் குழு....

துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன், கேணல் கருணா அம்மான், ஜோய் மகேஸ்வரன், ருத்திரகுமாரன் மற்றும் படப்பிடிப்பாளர் அலெக்ஸ், தமிழ்ச்செல்வனின் உதவியாளர் நெவில் மற்றும் தொல்காப்பியன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

பேச்சுவார்த்தைக்கான புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் புறப்பட்டுச் செல்ல முன்னர் தலைவர் வே.பிரபாகரனுடன் பலமணிநேரம் ஆலோசனை நடத்தியிருந்தனர். இதன்போது தாய்லாந்துப் பேச்சுக்களில் ஆராயப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட்டிருந்தது.

இக்கலந்துரையாடலை தொடர்ந்து - தமிழீழக் காவல் துறையினரின் மோட்டார் சைக்கிள் கள், பிக்கப் வாகனங்கள் முன் னும் பின்னும் பாதுகாப்பு வழங்க பஜிரோ வாகனங்களில் புலிகளின் பிரதிநிதிகள் மாலதி விளையாட்டரங்கைச் சென்றடைந்தனர். மைதானத்திலும் வாகனப்பவனி இடம்பெற்ற வீதிகளிலும் தமிழீழக் காவல் துறையினர் கடுமையான பாதுகாப்பை வழங்கியிருந்தனர்.

பிரதிநிதிகள் குழு மாலதி விளையாட்டரங்க மைதானத்தை மாலை 4.10 மணிக்கு சென்றடைந்ததும் அவர்களை வழியனுப்புவதற்காக காத்திருந்த விடுதலைப் புலிகளின் தளபதிகளும் முக்கிய பிரமுகர்களும், பொதுமக்களும் அவர்களை வரவேற்றனர்.

புலிகளின் மூத்த தளபதி பொட்டம்மான், கட்டளைத் தளபதிகள் கேணல் தீபன், கேணல் பானு மற்றும் மகளிர் படையணித் தளபதிகள் கேணல் விதுஷா, கேணல் துர்க்கா, மட்டு.-அம்பாறை மாவட்டத் தளபதி ராபர்ட், புலிகளின் பிரமுகர் வே.பாலகுமாரன், காவல் துறைப் பொறுப்பாளர் நடேசன், நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா, மகளிர் அரசியற்துறை பொறுப்பாளர் தமிழினி, யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, புலிகளின் பிரமுகர்களான பாப்பா, முகுந்தன் உட்படப் பெருமளவிலான போராளிகளும் மக்களும் பேச்சுவார்த்தைக் குழுவினரை வழியனுப்பி வைத்தனர்.

புலிகளின் பிரதிநிதிகள் குழுவை ஏற்றிச் செல்வதற்காக விமானப் படையின் இரண்டு பெல் ரக ஹெலிகள் புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கில் வந்து இறங்கின.

முதலாவது ஹெலியில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், கேணல் கருணா அம்மான் ஆகியோர் புறப்பட்டுச் சென்றனர். இரண்டாவது ஹெலியில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், ஜோய் மகேஸ்வரன், ருத்ர குமாரன், அலெக்ஸ், நெவில், தொல்காப்பியன் ஆகியோர் புறப்பட்டுச் சென்றனர். இவர்களை ஏற்றிய ஹெலிகள் மாலை 4.55 மணியளவில் மாலதி விளையாட்டரங்கில் இருந்து கிளம்பிச் சென்றன.

புதுக்குடியிருப்பிலிருந்து புறப்பட்ட ஹெலிகள் இரண்டும் கொழும்பு நோக்கிச் சென்றன. வவுனியாவுக்கு அப்பால் ஹெலிகள் எங்கு சென்றன என்பது குறித்து தகவல் அறிய முடியாத நிலையில் ஊடகங்கள் இருந்தன.

புலிகளின் பிரதிநிதிகள் குழுவினரை ஏற்றிய ஹெலிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தை அடையாததால் இந்தக்குழப்பம் நிலவியிருந்தது.

ஆனால் - இரண்டு ஹெலிகளும் நோர்வே தூதரகத்தில் இறங்கி, புலிகளின் குழுவை இறக்கி விட்டன. நேற்றிரவு புலிகள் பிரதிநிதிகள் நோர்வே தூதரகத்திலேயே தங்கினர். பின் மீண்டும் இன்று அதிகாலை 3 மணிக்கு புறப்பட வேண்டிய விமானத்திற்காக புலிகளின் பிரதிநிதிகள் கட்டுநாயக்கா விமானத்தளத்திற்கு ஹெலிகள் மூலம் சென்றனர்.இன்று அதிகாலை 3 மணிக்குப் புறப்பட்ட விமானம் பாங்கொக் விமான நிலையத்தை இலங்கை நேரப்படி அதிகாலை 5.30 மணிக்கு சென்றடைந்தது என எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நாளை 31 ஆம் திகதி இரு தரப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளன.

### கடும்....

கடற்படையினரின் பாதுகாப்பும் மோப்ப நாய்களின் ரோந்தும் இப்பகுதியில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை முதல் இந்த ஹோட்டல் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளை தாய்லாந்து அரசு மேற்கொண்டு வருகிறது.

அண்மையில் - தாய்லாந்திற்கு அருகே இந்தோனேசியாவின் தீவுகளில் ஒன்றான பாலித்தீவில் நடைபெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தை தொடர்ந்து,

சர்வதேச பயங்கரவாதி களின் அச்சுறுத்தல் தென்கிழக்கா சியாவில் காணப்படுவதாக - தாய்லாந்து அரசு கருதுவதாகவும்,

இதனாலேயே கடும் பாதுகாப்பு நடவ டிக்கைகளை எடுக்க தாய்லாந்து அரசு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

பிரத்தியேக கணனி வகுப்புக்கள்

பல்கலைக்கழக மாணவர்கள், உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்கென
MS EXCEL
MS WORD
பிரத்தியேக வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்துடன் ஆரம்பிக்-கப்படவுள்ளது.

ஆரம்பம் : 09.11.2002
காலை 10.00 மணி

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இயக்குநர்,
IIS. யாழ்ப்பாணம்.

## நாணய மாற்று விகிதம்

இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அந்நியச் செலாவணிகளுக்கான நாணய மாற்று விகிதங்கள் தொடர்பான விபரம் வருமாறு-

| | கொள்வனவு விலை (ரூ.ச) | விற்பனை விலை (ரூ.ச) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.06 | 96.55 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 149.40 | 150.64 |
| 1 யூரோ | 94.19 | 95.13 |
| 1 சுவிஸ் பிராங் | 64.16 | 65.14 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 53.32 | 54.17 |
| 1 ஜப்பானிய யென் | 00.77 | 00.78 |
| 1 சவூதி றியால் | 25.69 | 25.69 |

"Walk In" interview

A "Walk In" interview will be held at the IIS. 100, Clock Tower Road, Jaffna, for the Post of Lecturer and Visiting Lecturer on 02.11.2002 from 10.00 A.M. to 11.00 A.M.

Candidates holding a degree in computing from recognized Universities or an equivalent professional qualification are entertained.

Please note that attractive salaries will be offered for suitable candidates.

Director.
Institute of Informatics Studies,
100, Clock Tower Road, Jaffna.

இப்பத்திரிகை- இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.